பதினைப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது.

ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889 ...)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவ௵ மார்கழி௴ ௧௧௨ (1935 டிசம்பர் 26) வியாழக்கிழமை { இலக்கம்—௭௧.

## ஆழம்தெரியாமல் இறங்கிய மந்திரி.

### அபிசீனியரும் அடிமைக் கோழைகளா? மந்திரி ஹோரின் மதியிலாச்செயல்.

### பாரதநாடு என்ற பகற் கனவா?

(அரசியல்வாதி எழுதுகின்றார்)

''சுணங்கன்கள் குரைக்கட்டும், ஆனல் பிரயாணக் கோஷ்டி தடையின்றி முன்னேறிச் செல்லும்" என்று அக்காலம் இந்திய மந்திரியாயிருந்து இந்திய அரசியற் றிருத்த மசோதா வென்னும் சபடநாடக மசோதாவைச் சிருட்டித்து அதனைச் சட்டபூர்வமாக இயற்றி யதேச்சாதிகாரத்தர்பார் புரிந்து வந்த சாமுயல் ஹோர், பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாய் வந்ததும் தமது சுபாவ குணத்தைக் காட்டி, அபிஸீனியப் பிரச்சினை என்னும் கிணற்றில் ஆழந் தெரியாமல் இறங்கியதன் பயனாகத் தட்டுத்தடுமாறி, மானமிழந்து, பதவிழந்து, உலகோர் நகைக்க, தம் பதவியினின்றும் விலகிவிட்டார் என்னும் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் தேனும் வைத்துக்கொண்டு, தேனொழுகப் பேசும் ஆசாமிகளுள் சேர் சாமுயல்ஹோர்சிரேட்டம்பெற்றவராவர். வெள்ளையர் ஆதிக்கமே உலகு எங்கும் பரவவேண்டும். காட்டுமிராண்டிகளான கறுப்பர்கள் வெள்ளையரின் அடிமைகளாய் என்றென்றும் வாழவேண்டும் என்ற அந்தரங்க மனப்பான்மை கொண்டுள்ள சேர் ஹோர், பிரிட்டிஷ் பொதுத்தேர்தலின் போது சர்வதேசசங்க விதிகளைக் காப்பாற்றவேண்டும் என்று பரக்கப்பேசித் தெரிவு செய்வித்துக்கொண்டு, பின் அதே விதிகளுக்கு விரோதமாக பிரான்சுடன் சேர்ந்துகொண்டு ஓர் அநியாயச் சமாசத்திட்டத்தைத் தயாரித்து அதனை அபிசீனியாமீது சுமத்த முன்வந்தமையே, அன்னவரின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். இவ்விஷயத்தில் அபிசீனியாவும் நிராயுதரான இந்தியர்கள் வசிக்கும் பாரதநாடு போன்ற தேசமே என அவர் விபரீதமாக எண்ணி, இந்திய விஷயத்தில் தாம் எதனைச் சாதித்தனரோ அதனைத் தம் எண்ணப்படி அபிஸீனியாவில் சாதிக்கலாம் என்று சாமுயல்ஹோர் கனாக் கண்டார். ஆனல், அபிஸீனியர் சுதந்திரவீரர் என்பதனையும் அந்நியர்க்கு அடங்கியிருப்பதிலும்பார்க்க ஆவி துறப்பதே மேல் என்ற கொள்கையுடையார் என்பதனையும், அவர்களுக் காதரவாகவே உலக அபிப்பிராயம் இருக்கிறது என்பதனையும் பழைய ஆசாமி ஹோர் மறந்தமை அவரின் துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். ஏன்? இப்போதும் இருக்கும் பிரிட்டிஷ் மந்திரிகளில், மிஸ்டர் பால்டுவினுக்கு அடுத்ததாக, சேர் ஹோரே பிரதமமந்திரியாய் வரக்கூடும் என்ற நம்பிக்கை பலமாக விருக்கையில், தம் குட்டிக்கரணத்தால் பளிர்வு கெட்டு, பதவியிழந்து, மானமழிந்து வீழ்ச்சியடைந்தார் அவர். இதன் பொருட்டேனும், அவர்மீது நாம் அநுதாபம் கொள்ள வேண்டியிருக்கிறது.

சேர் சாமுயல் ஹோரின் இடத்திற்கு இதுகாறும் சர்வதேச சங்கத்தில் பிரிட்டிஷ் மந்திரியாய் இருந்த மிஸ்டர் அந்தோனி ஈடன் நியமிக்கப் பட்டுவிட்டார்.

மிஸ்டர் ஈடன் இற்றலியின் அநியாய யுத்தத்தைக் கண்டிப்பவர் எண்ணெய் நிர்ப்பந்தத்தைச் சர்வதேச சங்கம் விதித்து அதன் மூலமாக இற்றலியைப் பணியவைக்க வேண்டும் என்றும், இந்நிர்ப்பந்தத்திலும் பயன் கிடைக்காவிட்டால், யுத்தம் செய்தாவது இற்றலியை அடக்க வேண்டும் என்றும் கொள்கையுடையவராவர்.

### நிச்சயம்?

மிஸ்டர் ஈடனின் நியமனத்தினல், எண்ணெய் நிர்ப்பந்தவிதி சர்வதேச சங்கத்தில் நிறைவேறி விடுமோ என்று இற்றலியர் அஞ்சுகின்றனர். மிஸ்டர் ஈடனை நியமித்தமை, இற்றலிக்கு விரோதமான செயலாகும் என்று இற்றலிய அரசியல் வாதிகள் கருதுகின்றனர்.

### புகைரதக் கள்வன்

பருத்தித்துறையைச் சேர்ந்த விரகத்தி கோபால் என்பவன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் புகைவண்டியில் பிரயாணம் பண்ணும்போது இன்னொருவருடைய தோல் பெட்டியையும் வேறுசாமான்களையும் களவாடிக்கொண்டு வேறு பெட்டியில் போய் இருந்த போது பொருள்களின் சொந்தக்காரன் "சார்டி"டம் காரியத்தை அறிவிக்க அவர்கள் சோதனை செய்து கள்வனைக் கண்டு பிடித்தனர்.

எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் 100 ரூபாவில் 6 மாத காவலைத் தண்டனை பிணையில் விடுதலையாக்கப்பட்டான்.

## "நன்றி கெட்ட செயல்."

### ஸ்ரீ மகாதேவாவும் நியமனங்களும்.

### சேர் ஜெயத்திலகாவின் கண்டனம்.

சென்ற சனிக்கிழமையன்று இலங்கைக் காங்கிரஸ் மகாநாடு காலி மகிந்தாக்கல்லூரியிற் கூடியது அப்போது டொனமூர் அரசியற்றிட்டத்தை மாற்றுதல் வேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அரசியற் சீர்திருத்தம் வழங்கப்படுமானல், பொதுவாகச் சிறுபான்மையினரதும், விசேஷமாகத் தமிழ்மக்களதும் உரிமைகள் பாதிக்கப்படுமென்று சிறுபான்மையினர் கூறுவது பிழை என்று, இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய சேர் D B ஜெயத்திலகா கூறினர் இன்னும் ஸ்ரீ மகாதேவா, அரசாங்க உத்தியோக நியமனத்தில் சிங்களர்க்கே விசேஷ சலுகை காட்டப்படுகின்றது என்றதை ஆட்சேபித்த சேர் ஜெயத்திலகா பின்வரும் கருத்துப்படக் கூறினர்:—

"மிஸ்டர் மகாதேவா கூறியது சுத்த அபத்தமானது அரசாங்க உத்தியோக நியமன விஷயத்தில், சிங்களரிலும் பார்க்கத் தமிழர், பறங்கியர், என்பவர்களுக்கே விசேஷ சலுகை காட்டப்பட்ட பல சம்பவங்களை நான் எடுத்துக் காட்ட முடியும். அரசினர் ஈட்டு வங்கியை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம்- அவ்வங்கியின் அதிகார சபையிற் பெரும்பான்மையினர் சிங்களராகும். அப்படியிருந்தும், அந்த வங்கியின் மானேஜராக மிஸ்டர் மகாதேவா நியமனம் செய்யப்பட்டிருக்கிறர்; எனவே மிஸ்டர் மகாதேவா, இப்படிக் கூறுவது பேராச்சரியத்தை தாராநிற்கின்றது. இதனை விட்ட நன்றிகெட்ட செயல் பிறிதொன்றில்லை.

"மற்றும் சாகியத்தார் விஷயத்தில் பட்சபாதகமின்றி நீதிப்படி நடப்பது சிங்கள மக்களின் தேசிய லக்ஷணமாகும்,"

டிெ திர்மானம் சம்பந்தமாக மிஸ்டர் J N ஜினேந்திரதாஸ என்பவர் பின்வரும் கருத்துப்படக் கூறினர்:—

"வட இலங்கையில் உள்ள ஒரு சிலர், அரசாங்க உத்தியோக நியமன விஷயத்தில் நாங்கள் யதேச்சாதிகாரம் செலுத்துகின்றோம் என்பது வீண் குற்றச்சாட்டே: உத்தியோக நியமன விஷயத்தில் தமிழர் மிகவும் தாராள மனத்துடன் நடாத்தப் பட்டிருக்கின்றனர். சிங்கள நாடுகள் பலவற்றில்பெருந் தொகையான தமிழர் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் ஆனல், யாழ்ப்பாணப் பள்ளிக்கூடம் ஒன்றிலாவது சிங்களர் ஆசிரியராக இருக்கின்றனரோ என்பது சந்தேகமே,"

## புதுவையில் நிகழ்ந்த பேராச்சரியம்.

### 10-வயதுச் சிறுவனின் பழனிப்பக்தி. கிறிஸ்தவப் பிள்ளையின் சிவாலய தரிசனம்.

### நள்ளிரவில் நிகழ்ந்த அபூர்வசம்பவம்

சம்பத்தில் டில்லியில் நடந்த ஆச்சரிய சம்பவமென்று சொல்லப்படும் 9 வயதுக் குழந்தை சாந்திதேவியின் சரித்திரத்தை விடப் பதின்மடங்கு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதும் முற்றிலும் நம்பத்தக்கது என்று சொல்லும் படியாயும் உள்ள சம்பவம் என்று புதுவையில் சென்றவாரம் நடை பெற்றிருக்கிறது. அதன் விவரம் பின்வருமாறு:—

காலஞ்சென்ற சென்னை 'புக் பைண்ட'ரான மஹிமை முதலியார் செல்வப்புதல்வனான சுமார் 10 வயதுள்ள தொராஜ் என்பவன் இவ்வூர் ஸ்ரீமான் கே. ஏ. எம். பழனிசாமி செட்டியாரிடத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக குமாஸ்தா வேலை பார்த்து வந்தான். இவனது மாமா சென்னை ராயபுரம், நம்பர் 57, ஆடம் ராயபு வீதி, புக் பைண்டர் கே. நடராஜ நாயக்கர் என்பவர். சுமார் ஒரு மாதத்திற்கு முன் இவனுக்கு ஒருவித மயக்கமாக இருந்து பின்னர் தெளிவாயிற்று. அதிலிருந்து அவன் தனது பெற்றோர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தபோதிலும் விபூதி சந்தனப் பொட்டு முதலியவைகள் வைத்துக்கொண்டுசைவஸ்தலங்கட்குச் செல்லலாம் பித்தான். அங்கு அர்ச்சகர்களிடமிருந்து விபூதி வாங்கியதும், மூன்று பிரதக்ஷிணங்கள் வந்ததும் அவன் கையில் அரை ரூபாய் அல்லது ஒரு ரூபாய் காணப்படும். சில தினங்களுக்கு அவனுக்கு மாயமாய்க் கிடைத்த மேற்படி ரூபாயை ஏழை ஜனங்களுக்கு வினியோகித்தும் அவர்களுக்குத் துணிமணி வாங்கிக் கொடுத்தும் உதவி புரிந்து வந்தான். கடந்த நாலு ஐந்து தினங்களாகத்தான் பழனிக்குப் போகவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தான். அதற்கு அவன் சுற்றத்தார்கள் இப்போதுபோக வேண்டாமென்று கூறினர். அவன் தான் எப்படியும் போய்த்தான் தீரவேண்டும் என்று கூறி அதற்குப் போதிய திரவியம் சேகரிக்கத் தினந்தோறும் அவனுக்குக் கிடைக்கும் பணத்தைத் தனி உண்டியில் போட்டு வைத்திருந்தான். அவன் எப்போதும் ஸ்ரீ பழனியாண்டி ஸ்வாமியின் படத்தைப் பார்த்துப் பைத்தியம் பிடித்தவன்போல் சிரித்துக் கொக்கரித்தும் அதனுடன் பேசிக்கொண்டும் இருப்பான். அன்னருக்கு இவன் 'தாத்தா' என்று பெயர் கொடுத்தான். தன்னையினி மேல் நடராஜன் என்று கூப்பிடும்படி எல்லோரையும் வேண்டிக் கொண்டான். அவன் எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கும்போது தான் சிதம்பரம் சென்று வந்ததாகவும் ...்கு சில முக்கிய அரிய ஆச்சரியமான ...பவங்களைத் தனக்குத் 'தாத்தா' காண்...த்தாரென்றும் கூறினன். தனக்கு இனிமேல் காவி வஸ்திரம் கட்டிக்கொள்ள மிகவும் பிரியமாய் இருக்கிறது என்றும் கூறினன். அன்னையில் அவனுக்கு ஒரு சிகப்புத்துணி வாங்கிக் கொடுக்கப்பட்டது. சென்ற இரவு தன் கடைக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு ராவ் வீட்டின் மாடியில் இரவு சுமார் 9-30 மணிக்குப் படுத்துக் கொண்டிருந்தான். இரவு நடுநிசியில் சுமார் 12-30 மணிக்கு எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கு அணைக்கப்பட்டு மேற்படி சிறுவன் படுக்கையிலிருந்துகாணப்படவில்லை வீட்டின் எல்லாக் கதவுகளின் தாழ்ப்பாள்கள் ஒன்றும் திறக்கப்படவில்லை; யாதொரு சந்தடியும் கேட்க வில்லை. தனது பாயும் பாயின்மேல் சிகப்புக் கரைக் கதர்த்துண்டும் (அவன் எப்போதுங் கட்டுவதுகதர்) போடப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் தரையில் இரண்டு பாதங்களின் அடையாளங்கள் வெண்கட்டியால் குறிக்கப்பட்டு அதற்குப் பக்கத்தில் "நான் இட்டுக்கொண்டுபோயிருக்கிறேன். எம். நடராஜன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது விஷயம் போலிசாருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஊரில் எங்கும் இதே பேச்சாகவும், மிக்க பரபரப்பாகவும் இருந்து வருகிறது. அவன் படுக்கை இன்னும் அப்படியே போடப்பட்டிருக்கிறது.

### சோரமாகக் கள்வியாபாரம்.

ஆனைக்கோட்டையில் வசிக்கும் சுப்பன் செல்லன் என்பவன் மதுப் பரிசோதகரால் உத்தரவில்லாமலும் லைசென்ஸ் இல்லாமலும் அவ்வூர் பண்டாரம் தமையந்தி என்பவவுடைய வாசில் இரண்டு தென்னை மரத்தில் கள்ளுச் சேர்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான். எதிரி தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் அவனுக்குச் சென்ற 19 – 12 – 35 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்.

### சாப்பாட்டில் ஊமத்தங்காய்.

பாப்னுவில் ஒரு பெண் தனது சணவன் திட்டியதால் கோபமடைந்து சாப்பாட்டில் ஊமத்தங்காய் சத்தைச் சேர்த்து சாப்பாடு போட்டாள். அவளது சணவன் சாப்பிட்டபிறகு சற்போதமிழந்தான அந்த சமயத்தில் அவள் அவனை காயப்படுத்தினுள். இதுவிஷயமாக அவள்மீது வழக்குத் தொடரப்பட்டதில் பாப்னு செஷன்ஸ் நீதிபதி ஜூரிகளின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு அப் பெண்ணுக்கு ஆறுவருட தண்டனை விதித்தார்.

# பாலர்பகுதி.

எனது அன்புமிக்க
மருமக்களே!

சென்றமுறை, நான் உங்களுக்கு அபிஸீனிய யுத்தத்தைப் பற்றியும், சர்வதேச சங்கத்தைப் பற்றியும், எனக்குத் தெரிந்த வரையிற் சொல்லித் தந்தேன் அல்லவா! இன்றைக்கு நான் சில கேள்விகளைக் கேட்கிறேன் மறுமொழி சொல்லுங்கள் பார்க்கலாம்: திறமையுடன் மறுமொழி எழுதும் நான்கு பேருக்குப் பரிசுகள் கொடுப்பேன். விடைகள் எழுதும்போது இந்தத் துண்டையும் வெட்டி அனுப்புங்கள்.

**பரிசுப் போட்டி**

இல.................
பெயர்...........................
விலாசம்.......................

## கேள்விகள்.

### அபிஸீனிய யுத்தம்.

1. அபிஸீனியா என்னும் தேசம் எங்கேயிருக்கிறது?
2. இற்றலி அந்தத் தேசத்துடன் யுத்தஞ் செய்வது ஏன்?
3. அபிஸீனியாவில் வசிப்பவர்களைப் பற்றி வரிக்குக் குறையாமல் எழுதுக.

### சர்வதேச சங்கம்.

1. சர்வதேசசங்கம் என்றால்என்ன?
2. இந்தச் சங்கத்தின் நோக்கம் என்ன?
3. தனது அங்கத்தவர்க் கிடையே சண்டை வராமல், இச் சங்கம் எப்படித் தடுக்கும்?

### பாலர்சங்கப் புதினம்.

எனது மருகி இல. 3 க. நாகரத்தினம் சென்ற ஆவணிமாதம் கடைசிக்கூற்றில் தமிழ்ப் பாடசாலையில் 4-ம் வகுப்பில் சித்தியடைந்து புரட்டாதிமீ 16ம் உ சுண்டிக்குளி பெண்கள் லூரியில் இங்கிலிஷ் இரண்டாம்தரத்திற் சேர்ந்து படித்து, மார்கழிமாதம் நடந்த பரீட்சையிற் சித்தியெய்தி இப்போது இங்கிலிஷ் 3-ம் வகுப்பிற் படிக்கிறு என்று அறிந்து சந்தோஷம் உறுகின்றேன். இந்த மருகி 6 மாதகாலத்திற்கிடையில் இவ்வளவு கெட்டித்தனமாகப் படித்துப் பரீட்சையிற் சித்தியடைந்ததைப்போல எல்லா மருமக்களும் தங்கள் படிப்பு விஷயத்திற் கவனமாய் இருப்பார்களாக.



இல 7. சி. வள்ளியம்மா, நத்தார் விடுதலைக் காலத்தில் தனது பெற்றோருடன் தனது தாய்நாடாகு யாழ்ப்பாணத்திற்குக் கொழும்பில் இருந்து வருவா. இவ இப்போது தனது வகுப்பில் 6–வது பிள்ளையாய்வந்துவிட்டா என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். இவ தன் பெற்றோருடன் கோப்பாயில் "மகாவளவு" என்னும் இல்லத்தில் வசிப்பா.

இன்று வெளியாயிருக்கும் பாலர் சங்க அங்கத்தவர்கள் பெயர்கள், 242-ம் இலக்க மருகி சு. உருக்குமணியால் எனக்கு அனுப்பப்பட்டனவாகும். இந்த மருமக்கள் யாவரும் கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியாசாலையிற் படிப்பவர்கள். மருகி சு. உருக்குமணியின் முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

## மருமக்கள் பகுதி.

7. சி. வள்ளியம்மை: சந்தோஷம்! நல்லாய் வந்து காணலாம். ஆம், ஆம்: தம்பிமாரையும் அழைத்துக்கொண்டுவா. விலாசமாற்றத்தைச் சொல்லிவிட்டேன்.

3. க. நாகரத்தினம்: ஒரு ஆளை அனுப்பிவிட்டால் நல்லது. சந்தோஷம், முதலாம் பிள்ளையாய் வந்துவிட்டேன் என்று எனது அருமை மருகியே, நீ எப்போது எனக்கு அறிவிக்கப்போகின்றும்

242. சு. உருக்குமணி: மருகியே! உன் சகோதர சகோதரிகளைச் சேர்த்துவிட்டிருக்கிறேன்: ஏனைய விபரங்களுக்கு, நின் ஆசிரியரைக்கு எழுதியிருக்கிறேன்.

S. S. சுந்தரம்: அனுப்பிவிட்டேன படிப்பு விஷயம் எப்படி?

இப்போது எனது சங்கத்திற் புதிதாகச் சேர்ந்துள்ள மருமக்களின்பெயர்கள் பின்வருமாறு:—

| இல | பெயர் |
|---|---|
| 282. | சு. சத்தியபாமா |
| 283. | த. திலகவதி |
| 284. | வே. திருப்பதி |
| 285. | க. சோமசுந்தரம் |
| 286. | வை. நாகலிங்கம் |
| 287. | வை. அகிலாண்டேஸ்வரி |
| 288. | நா. கிருபாம்பிகை |
| 289. | பொ. அரியலட்சுமி |
| 290. | இ. கமலாட்சி |
| 291. | ச. யோகம்மா |
| 292. | க. மனோன்மணி |
| 293. | ஐ. உமாதேவி |
| 294. | சி. பொன்னம்மா |
| 295. | வே. அன்னலிங்கம் |
| 296. | ஏ. சண்முகநாதன் |
| 297. | சி. குமாரசுவாமி |
| 298. | சி. அம்பலவாணி |
| 299. | சி. சோமாஸ்கந்தன் |
| 300. | மு. பாக்கியம் |
| 301. | க. பாறுபதி |
| 302. | வை. மங்கையற்கரசி |
| 303. | த. சத்தியபாமா |
| 304. | மு. சிவபாக்கியம் |
| 305. | சே. குமாரசாமி |
| 306. | வை. ஐயம்பிள்ளை |
| 307. | வ. நாகமுத்தன் |
| 308. | சி. சிவபாதசுந்தரம் |
| 309. | க. ரெங்கையா |
| 310. | சி. கனகரத்தை |
| 311. | சே. சிவராசா |
| 312. | ஈ. சோதியம்மா |
| 313. | அ. யோகம்மா |
| 314. | இ. பாக்கியம் |
| 315. | தோ. சிவயோகம் |
| 316. | சி. திலகவதி |
| 317. | இ. பரமேஸ்வரி |
| 318. | த. புவனேஸ்வரி |
| 319. | க. மனோன்மணி |
| 320. | ஆ. சத்தியபாமா |
| 321. | வே. பவளம்மா |
| 322. | கோ. மனோன்மணி |
| 323. | இ. துரைச்சாமி |
| 324. | க. மார்க்கண்டு |
| 325. | சி. வேலாயுதபிள்ளை |
| 326. | நா. பத்மநாதன் |
| 327. | சி. ஆதிமூர்த்தி |
| 328. | சி. குருநாதநாதன் |
| 329. | சி. கயிலாயபிள்ளை |
| 330. | க. சபாரத்தினம் |
| 331. | க. செல்லத்துரை |
| 332. | க பரமநாதன் |
| 333. | நா. கனகாம்பிகை |
| 334. | பொ. கமலாம்பிகை |
| 335. | பொ. இராமநாதன் |
| 336. | வே. முத்துக்குமாரு |
| 337. | மு. கனகரத்தை |
| 338. | வி. சிவலிங்கம் |
| 339. | கோ. சிவனடியான் |
| 340. | பொ. குமாரு |
| 341. | மு. இராமச்சந்திரன் |
| 342. | க. இராசலிங்கம் |
| 343. | சி. கமலம்மா |
| 344. | தீ. மகேஸ்வரி |
| 345. | பொ ஏகாம்பிகை |
| 346. | ந. மகாதேவன் |

கடைசியாக, எனது அருமை மருமக்களே, இன்று உங்களுக்கு நான் புதிதாக ஒன்றும் சொல்லித்தரவில்லை. புதிதாகச் சேர்ந்துள்ள மற்றும் மருமக்களின் பெயரும் இலக்கமும், மூன்றியைப் போல இனித் திங்கட்கிழமைகளில் வெளிவரும். மதுப்பத்திரம் அப்படியே திங்கட்கிழமைகளில் வெளிவரும்.

இங்ஙனம்
உங்கள் வாஞ்சையுள்ள
சுப்பு மாமா.


# இனு!

## இந்துசாதனத் தேதிஅட்டவணை 1936.

1936–ம் ஆண்டிற்குரிய இந்துசாதனத் தேதியட்டவணை வழக்கம்போலச் சகல விபரங்களோடும் அழகுறத் தொகுக்கப்பட்டு வெளிவந் திருக்கிறது; குறித்த அட்டவணையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கவியரசர் ரவீந்திரநாததாகூர், பண்டிதர் மதன்மோகன் மாளவியா என்னும் பெரியார் மூவருடைய பிரதிமைப் படங்கள் தனித்தனி அமைந்துள்ளன. (31-3-36) முடிய தங்களால் வரவேண்டிய கிரயத்தை "நிலுவை" யின்றி நிகழும் யுவவருஷத்தைமாசம் க-ம் (14–1–36) தேதிக்குமுந்தி அனுப்பிவைக்கும் அபிமானிகட்கு, 50சதம் விலைகொண்ட இந்தத் தேதியட்டவணை (தபாற்செலவுதானுமின்றி) "இனு"மாக அனுப்பப்படும்; புதிய அபிமானிகளாய்ச் சேர விரும்புவோர்க்கும் இது நல்ல சமையமாகும்.

இந்துசாதனலயம்,
12—12—35.

மனேஜர்.


# வட்டுக்கோட்டையில் மதுப்பிரியர் தோல்வி.

## தவறணை திறப்பதற்குச் சாவுமணி! 104 பேரே தவறணை வேண்டுமென்றனர்.

### மதுநீக்க அபிமானிகளின் நன்முயற்சி.

[நமது நிருபர்.]

தவறணைகள் திறக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் மதுப்பிரியர் சிலர் சென்ற 21–ம் தேதி நிகழ்ந்த வாக்குச் சம்மதப் போட்டியில் மகத்தான தோல்வியடைந்தனர்.

இவர்கள் இப்போது சிலகாலமாக யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் தவறணை திறப்பதற்கு வாக்குச் சம்மதம் எடுப்பித்து வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

வட்டுக்கோட்டையில் வாக்குச் சம்மதம் அளிக்க உரித்தானவர்களின் தொகை 2433. இவர்களில் 111 பேரே வாக்குச்சம்மதம் அளிக்கும் இடத்திற்குச் சென்றனர். அவர்களிலும் 104 பேரே தவறணை வேண்டும் என்றனர்!

தவறணைகள் மீண்டும் ஆரம்பித்தல் ஆகாது. பாவரி முறையை அநுசரணைக்குக் கொண்டுவருதல் வேண்டும் என்ற கொள்கையாளர், தவறணை அபிமானிகளை, இப்பகுதியிலேனும் தமது சேட்டைகளைச் செய்யாது தடுத்தல் வேண்டும் எனக் கங்கணம் கட்டிநின்றனர்; தம் கட்சிக்குப் போதிய வாக்காளர்களைச் சேர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளில், மதுப்பிரியர்கள், வேறு இடங்களில் இருந்து ஆட்களை இறக்குமதி செய்வதும், அவர்களைக்கொண்டு சம்மதம் சொல்லுவித்தலும், ஒருவரையே பலமுறை சென்று வாக்குச் சம்மதம் சொல்லும்படி ஏவுதலும் வழக்கம். இத தீமைகள் நேரிடா வண்ணம், இங்குள்ள தவறணை நீக்க அபிமானிகள் கவனமாய் இருந்தது பாராட்டத் தக்கது.

இனி, இங்கே வாக்குச் சம்மதக் கொடுத்தவர்களில், ஒருவராவது, யோக்கியம், கண்ணியம் வாய்ந்தது எனச் சொல்லப்படும் சமூகத்தைச் சேர்ந்தவராயில்லை. அவர்களில் எவரேனும் வாக்குச் சம்மதம் அளிக்கும் இடத்திற்குத்தானும் போகவில்லை வாக்குச் சம்மதம் கேட்டதினமாய 21 தேதி அதிகாலைதொடக்கம் பின்னேரம் வரை, நீண்டாச் சாதியைச் சேர்ந்த அனேகர் கார்களிற் கொண்டுவரப்பட்டனர் இவர்களில் அனேகர் வாக்குரிமை செலுத்துதற்கும் அருகதையற்றவர் எனக் காணப்பட்டது. இவர்கள் பிறவிடங்களில் இருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டவர்கள் போலும்!

தவறணை நீக்க அபிமானிகளது வாக்குச் சம்மதம் எடுக்கும் ஸ்தலத்தில் இருந்த உத்தியோகத்தரது, முயற்சியால், இங்கே சோரத்தலமான கர்மம் எதுவும் நடைபெறவில்லை.

தவறணைகள் ஊர்களில் திறக்கவொண்ணாது என்னும் கொள்கையுடையார், வட்டுக்கோட்டைச் சம்பவத்தில் இருந்து தக்க படிப்பினை பெறலாகும் தவறணை வேண்டும் என்று ஒருசிலர் சேர்ந்து பெட்டிஷம் அனுப்பினவுடன் அரசினர், இதற்கென வாக்குச்சம்மதம் பெறவேண்டுமென்று கர்மம் ஆற்றி ஓர் நாளையும் குறிக்கின்றனர். தவறணைப் பிரியரான சில சுயநலப் புலிகள், வேற்றூர்களில் இருந்து ஆட்களை இறக்குமதி செய்து உத்தியோகத்தரையும்பொதுஜனங்களையும் ஏமாற்றி ஈற்றில தவறணைகள் திறப்பித்துவிடுகின்றனர். வட்டுக்கோட்டைச் சம்பவத்திலிருந்து அரசினரும் தவறணை திறப்பதில் பொதுஜன அபிப்பிராயம் எப்படியிருக்கிறது என்பதை அறியலாகும்.

## திருவெம்பாவைப் பூசையும் தரிசனமும்.

நவ சத்திகளின் பிரேரகத்தினுல் மாயையை அதிட்டித்திருக்கும் அநந்தர்தவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப் பிருதிவிமுடிவான பிரபஞ்சகாரியம் நிகழ்வதைக் குறித்தே திருவெம்பாவை மணிவாசகப் பெருமானுற் பாடியருளப்பட்டதென்பது கற்றோர் கொள்கை. இத்திருவெம்பாவைமார்கழித்திருவாதிரையை இறுதியாகவுடைய பத்துநாட்களிலும் புலரிக்காலத்திலே சைவாலயங்களிற் பூசனை நடந்தவுடன் சுவாமி சந்நிதானத்தில் ஓதப்பட்டு வருகின்றது. இப் பத்து நாட்களிலும் ஆன்மார்த்த பரார்த்தபூசைகளில் திருவெம்பாவை மாத்திரம் ஓதப்படல்வேண்டுமென்பது பெரியோர் கொள்கை; இங்குள்ள சைவாலயங்களெல்லாவற்றிலும் அப்படியே நடைபெற்று வருகின்றது. சைவ நன்மக்களாயுள்ளவர்கள் தினந்தோறும் தங்களதங்கள் காலைக்கடன்களை முடித்துப் புலரிகாலத்திலே ஆலய தரிசனஞ் செய்வது உத்தமோத்தமமாகும்; அங்ஙனஞ் செய்யாதார் மார்கழிமாசம் முழுவதுமேனும் விடியற்காலத்திற்சுவாமி தரிசனஞ் செய்தல் நன்றாகும்; அதுவும் இயலாதவர் குறித்த இப்பத்து நாட்களிலேனும் ஆசாரசீலராய்த் திருக்கோயிலையடைந்து சிவாலய தரிசனமும் திருவெம்பாவைப்பாராயண சிரவணமுஞ்செய்தல் நன்றாகும்.

வருகிறதிங்கட்கிழமை (30-12-35) அதிகாலையில் திருவெம்பாவைப்பூசை ஆரம்பமாகும். ஆருத்திராதரிசனம் வருகிற ஜநவரி மீ 8உ புதன்கிழமை நிகழும்.


# நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[வரையுளது]

மூலதனம் ரூபா 30,000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
சுரைச்சி நீர்ப்பாச்சற்பகுதிகளில் நடந்துவருகிறது.

பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.
பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு அற்றுக்கு இந்த கழிவு
நீர்ப்பாச்சற் பகுதி வேளாண்மை நானேற வருவாய் ஏறிவருவது தெளிவாயிற்று.

அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
" சுந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. சுப்பையா
" நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.
ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

ஆரம்ப கருத்தாக்கள்:—

Dr வி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R, R. சுப்பையா J P. யா. ந. ச. தலைவர்.
வி. முத்துவேலு J. P. கொச்சுவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. சுப்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை.
வீ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை.

(H 192. 6-11-35 to 5-5-36) (வி)

# முதலாளித்துவக்கொள்கை அதன் நோக்கம் யாது?

## ஏகாதிபத்தியவிருத்தியிற்கண்ணும்கருத்தும் தேசியவாதிகளின் பட்டவேட்டை.

## பாமரஜனங்கள்படும் பரதவிப்பு.

(இலங்கை சமசமாஜக்கட்சி என்னும் அபேதவாத சங்கத்தை நிலவும்போது அதன் தலைவர் டக்டர் R. டி, சில்வா பின்வருமாறு பேசினர்)

அரசாங்க சபையினர் என்பவர், அறிவிற் சிறந்தவர்களென்றும், சகுதி பேதம் பாராட்டும் சுபாவமற்றவர்களென்றும் கருதப்படும் வகுப்பைச் சார்ந்தவர்களுடைய கூட்டம். அவர்களுடைய அரசியல் மேடைகளெல்லாம் முதலாளிமார்களின் நன்மையை நாடி உழைக்கும் முதலாளிகளுடைய ஸ்தாபனங்களாகும் அவர்களுக்குள் பிரதானமான அபிப்பிராய பேதங்கள் கிடையா, எனவருக்கும், அந்தரங்கமான நோக்கம் ஒன்றாக இருக்க, அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லையன்றோ? ஆகவே இலங்கை சம சமாஜக் சகுதி யென்ற பெயருடன் கூடிய இந்தப் புதிய சகுதி தோன்றுவதற்கு மேற் குறிப்பிட்ட விஷயங்களே போதுமான

கடந்த சில வருடங்களாக ஏழைக் குடி ஜனங்களுக்கு ஏற்பட்டுவரும் கஷ்ட நஷ்டங்கள் கணக்கிலடங்காதவை. அவர்களுடைய உணவுப் பொருள்களின் மீது வரிப்பளுசுமத்தப்பட்டுவிட்டது. வறுமையும் நோயும் அவர்களிடையே தலைவிரித்தாடுகின்றன. ஜீவனமார்க்கமின்றி பாதவிப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் பயங்கரமான அளவிற்குப் பெருகிக் கொண்டு வருகின்றது. கடந்த சில மாதங்களுக்குள் சுமார் 90,000 பேர்கள் வரையில்இலங்கையிலே பசியினாலும் பிணியினாலும் பரலோகப்பிராப்தியடைந்துவிட்டார்கள் பசுமையாகத்தோன்றியகிராமாந்தரங்களெல்லாம்இப்பொழுது மயானபூமிகளாகத் தென்படுகின்றன.




காரணங்களாகும் ஆனல், இச்சக் காரணங்கள் சம சமாஜக் சகுதியின் பூரா நோக்கங்களுமல்ல. சம சமாஜக் சகுதி தோன்றியதற்கு அடிப்படையாகவுள்ள காரணத்தை உலக அபிப்பிராயத்தில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களிலிருந்தும், இலங்கையின் தற்கால நிலையையிலிருந்தும் ஒருவாறு யூகித்தறிந்து கொள்ளலாம். அதாவது கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக உலகத்தில் பிரபல்யம் பெற்றிருக்கும் முதலாளித்துவக் கொள்கை இப்பொழுது சிறிது சிறிதாக க்ஷீணித்துக் கொண்டிருக்கின்றது. முதலாளித்துவக் கொள்கைக்கு க்ஷீணதசை ஏற்பட்டுக் கொண்டு வருவதன் காரணம் பொதுமக்களின் நன்மையை நாடி உழைப்பவர்களின் தொகை பெருகிக் கொண்டு வருவதேயாகும். அபேதவாதக் கொள்கையின் மூலமாகப் பொது ஜனங்களுக்கு எவ்வளவு தூரம் நன்மையேற்படக் கூடுமென்பதையும் சோவியத் ருஷியா நிருபணம் செய்து காட்டிவிட்டது.

ஆனல் தேசிய வாதிகளெனச் சொல்லிக் கொள்ளும பேர்வழிகளோ பகட்டான பட்டங்களையும் கௌரவங்களையும் நாடி அரச குடும்பத்தைச் சார்ந்த பிரபுக்களுக்கு ஆடம்பரமான விருந்துகளை அளிப்பதிலும் பொது ஜனங்களின் பணத்தைக் கொண்டு ஜுபிலி விழாக்களைக் கொண்டாடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த வரிகளெல்லாம் ரத்து செய்யப்பட்டு வருகின்றன. அயல் நாட்டினர்களால் கொடுக்கப்படும் தீர்வைகளும் குறைக்கப்பட்டு வருகின்றன.

முதலாளிமார்களின் மீது தொடரப்படும் சண்டை உண்மையில் தேசிய விடுதலையின் பொருட்டு தொடரப்படும் சண்டையேயாகும். ஏனெனில் முதலாளிமார்களுள் முக்கியமான வகுப்பினர் பிரிட்டிஷார் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இலங்கையிலுள்ள முதலாளிமார்கள் ஏகாதிபத்தியக்கொள்கைக்கு முடிவணங்குகின்றவர்களாகவே இருக்கின்றனர். ஆகையால் அபேதவாதச் சங்கத்தை நிறுவப் போராடுகின்றவர்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்துக்கொண்டு கொள்ளையிட்டுக் கொண்டுவரும் வகுப்பினர்களையும் தாக்குகின்றவர்களேயாவார்கள்.

# வடபகுதியில் வெள்ளப்பெருக்கு.

## தென்மராட்சியின் பரிதாப நிலைமை.

## கிராமச்சங்கத்தின் கடமை.

(நமது நிருபர்.)

சென்றவாரம் வருஷித்த மழை மிகுதியினால் தென்மராட்சிப் பகுதியில் விளைந்த கெடுதிகளோ கூறற்பாற்றன்று. வெள்ளப்பெருக்கினால் தோட்டங்களிலுள்ள பயிர்களை அழிந்தி அழிபலாயின. பள்ள நிலங்களிலுள்ள நெற்பயிர்க்குப் பெருங் கெடுதியுண்டாய் விட்டதெனப் பலரோலாவா புலம்புகின்றனர். பல இல்லங்களுள் வெள்ளம் புகுந்துவிட்டது. மழை பாதிப்பு மன்றி எத்தனையோ வீடுகள் வீழ்ந்தும் பல சுவர்கள் இடிந்தும் விட்டன. இதனால் அநேகர் இருக்க இல்லமுமறறுத் தத்தழிக்கின்றனர். வெள்ள மிகுதியால் அதிகம் பீடியடைந்த பகுதிகள் மட்டுவில், சாசாலை, மீசாலை சாவகச்சேரி முதலிய இடங்களாகும்.

இப்பொழுதுள்ள கஷ்டத்துடன் இன்னும் பெருங் கஷ்டமென்று எதிர்பார்க்கப்படுகிறது அதாவது இவ்வெள்ளமும் வற்றப் பனியும் வந்துசேர மலேரியாக் காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு முதலிய நோய்கள் பரவும். இவ்வெள்ளப்பெருக்கு இந்நோய்களுக்கு மிகவும் உதவியானதன்றோ.

இப்பகுதிகளில் வெள்ளத்தை அப்பாற்படுத்துவதற்கான வசதிகளில்லை. இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு அரசினர் இதற்காகப் பல உதவிகள் புரிகின்றார்கள். ஆனல் இப்பகுதிக்கு மாத்திரம் இச்சலாக்கிய மளிக்கப்படாததின் காரணமென்னே? இது எம் அரசாங்கசபைப் பிரதிநிதிகளின் மேலுள்ள குற்றமல்லவா? வடமாகாண தலைவர்கள் இப்பகுதிகளை வெகு சீக்கிரத்திற் தரிசித்து வேண்டியவற்றைச் செய்தல் வேண்டும்.

இன்னும் சாவகச்சேரிக் கிராமச் சங்கமும், இவ்விஷயத்திற் சிரத்தை எடுக்கவேண்டும். இக் கிராமச்சங்கம் இந்த வடமாகாணத்தில் உள்ள சங்கங்களிற் சிரேட்டம் பெற்றது எனப் பாராட்டப்படுகிறது. எனவே இச்சங்கம் இவ்வெள்ளத்தினால் ஏற்பட்ட, ஏற்படவிருக்கும் விபத்துக்களைத் தடுக்க இப்போதே முன்வரல் வேண்டும்.

## அகில மலாயா ஆதித்திராவிட மகாநாடு

ஷை மகாநாட்டின் 3-வது கூட்டம் கோலாலம்பூர் நகரமண்டபத்தில் 29-12-35 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும். ஸ்ரீ இ. நா. தம்பித்துரை மகாநாட்டுத் தலைவராயும், ஸ்ரீ க. ஆ. நாராயண ஐயர் மகாநாட்டுத் திறப்பாளராகவும், ஸ்ரீ பி. ஆ. மா. கஞ்சமலைமூர்த்தி அவர்கள் வரவேற்புத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

## யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை வருகிற பெப்ரவரி மாதம் 3-ம் தேதி ஆரம்பமாகும் என்று சென்ற திங்கட்கிழமை வெளிவந்த கெஸற்பத்திரிகை கூறுகிறது.

## ஸ்ரீமதி கமலாநேரு.

சென்ற சில நாட்களாக ஸ்ரீமதி கமலாநேருவின தேகநிலை அபாயகரமானதாயிருந்து இப்போது ஒருவாறு சுகமடைந்து வருகிறது என ஓர் தந்திச்செய்தியினல் அறியக்கிடக்கின்றது.

# முடியாது! முடியாது!

## சிங்களத்தலைவரின் விடாக் கண்டவாதம். சிங்களக் காங்கிரஸ் தடபுடல் தர்பார்

## அந்தக் காலம் மலையேறிவிட்டதாம்!

(நமது சொந்த நிருபர்.)

இரு சிங்களப் பிரதிநிதிகளுக்கு ஒரு தமிழ்ப்பிரதிநிதியாக, முந்திய சட்டநிரூபண சபையில் அங்கத்தவ ஸ்தானம் வகித்தனர். அப்படியாகவே இனியும் அளித்தல் வேண்டும் என்று தமிழ் மக்களிற் சிலர் இப்போது கிளர்ச்சி செய்கின்றனர். இவர்கள் எப்படிக் கிளர்ச்சி செய்தாலும், சிங்களர் இனி இடங்கொடுக்கமாட்டார் என்பதே சென்ற சனிக்கிழமை காலியில் நிகழ்ந்த தேசியக் காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவர் கூற்றில் இருந்து புலப்படுவதாகும்.

தலைமை வகித்த மிஸ்டர் H. W அமரசூரியா என்பவர் இது விஷயமாகக் கூறிய பின்வரும் மொழிகள் சிங்கள மக்களின் மனப்பான்மையைத் துலாம்பரமாகக் காட்டாநிற்கின்றன.

"எமது அரசியல் அபிவிருத்தியில் இப்போது ஒரு நெருக்கடியான நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம் இச்சமயத்தில் நாம் உஷாராகச் சாவதானமாக இருக்காவிட்டால், எமது விருத்தி நிச்சயமாய்த் தடைப்பட்டுவிடும்.

"எமது லக்ஷ்யம் சுயராச்சியம் பெறுவதேயாம். அந்த லக்ஷ்யத்தைப் பூர்த்தி செய்வதற்கான கிளர்ச்சியில் நாம் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். எமது முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எமது மத்தியில் உள்ள விஷமிகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர். நாம், தங்களுக்குச் செய்த வாக்குத் தத்தங்களை மீறிவிட்டோம் சொன்ன சொற்படி நடக்கவில்லை என்று யாழ்ப்பாணத்து நண்பர்கள் எம்மீது குற்றம் பகிர்கின்றனர். அவர்களுக்கு நான் கூறக்கூடியது இதுவே 2 சிங்களர்க்கு 1 தமிழ்ப் பிரதிநிதி என்றவகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் வழங்கும் காலம் மலையேறிவிட்டது எனவே அதனைப் பெறுதற்குச் செய்யும் கிளர்ச்சி வீணாக முடிந்துவிடும். அப்படியான வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவத்தை இந்தக் காங்கிரஸ் முற்றாகக் கண்டிக்கிறது"

இன்னும் தேசாதிபதிக்கு இப்போதிருக்கும் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும், மூன்று வெள்ளையுத்தியோகத்தரையும் நீக்குதல் வேண்டும், உத்தியோகத்தர் நியமனம், பணப்பொறுப்பு என்பன ஜனப்பிரதிநிதிகள் வசம் இனி இருத்தல்வேண்டும் என மிஸ்ரர் அமரசூரியா தமது தலைமைப் பேருரையிற் கூறினர்.

## புளியமரத்திலிருந்து கள்.

ராமனதபுரம் ஜில்லா காரைக்குடி நகரில் ஸ்ரீமான் மருதப்ப பிள்ளை என்பவரின் வீட்டு வளவுக்குள்ளிருக்கும் ஓர் புளியமரத்திலிருந்து கள் வடிகிறதான செய்தி கிடைத்திருக்கிறது. அனுதினமும் இம் மரத்திலிருந்து சுமார் $\frac{1}{4}$ படி கள் வடிகிறதாம். அதைப்பரிசோதித்து அருந்திப் பார்த்ததில் கள்ளுக்கிருக்கிற இனிப்பு, சுவை, போதை முதலியவை யிருக்கிறதாம்.

இவ்விஷயம் மதப்பகுதி அதிகாரிகள் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டிருக்கிறதெனவும், இந்த ஆச்சரியத்தைத் திரளான ஜனங்கள் பார்த்து வருவதாயும் கூறப்படுகிறது.

## நள்ளிரவில் வெள்ளப் பிரவாகம்.

### நால்வர் உயிர் துறந்தனர்.

### தெளிதிணையிற் கோரவிபத்து.

தெளிதிணையைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் சென்ற சனிக்கிழமையன்று இரவு திடீரென வெள்ளப் பிரவாகம் ஏற்பட்டது. அதன்காரணமாக ஐந்து பேர்களடங்கிய ஒரு குடும்பத்தில் நால்வர் மாண்டனர். உயிர்தப்பியவரான தசஹாமி யென்பவருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் தமது பெண்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் நேர்ந்த கதியைப்பற்றி மரணவிசாரணை அதிகாரியிடம் பின் வருமாறு கூறினர்.

"எனது வீடு திட்டவலக்கத் துறையிலிருந்து சுமார் நூறு கஜ தூரத்திற்கப்பாலுள்ளது. சென்ற சனிக்கிழமை யன்றிரவு எனது வீட்டில் நானும் எனது இரு புத்திரிகளும் இரு பேரப் பிள்ளைகளுமாக ஐவர் இருந்தோம். நள்ளிரவில் வெகு வேகமாக ஜலம் வருவதைப் போல் சப்தம் கேட்டது. கண்ணை விழித்துப் பார்க்கையில் எனது வீடு வெள்ளத்திலிருப்பதை யறிந்தேன். சில நிமிடங்களுக்கெல்லாம் வீடும் விழுந்துவிட்டது. எனது குமாரிகளுள் ஒருத்தியும் இரு பேரப்பிள்ளைகளும் பிரவாகத்தில் இழுத்துக்கொண்டு போகப்பட்டுவிட்டனர். பிறகு அந்தப் பெண்ணின் சவம் தெளிதிணை ஏலாவில கண்டுபிடிக்கப்பட்டது.

நானும், எனது மற்றொரு பெண்ணும் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டோம். அங்கு இந்தப் பெண்ணும் மரணமடைந்துவிட்டாள். அவளுடைய இரண்டு கால்களும் முறிந்திருந்தன. எனக்கும் பல காயங்களேற்பட்டிருக்கின்றன.

## காரைநகர்க் கிராமச்சங்கம்

### ஸ்ரீ துரைசுவாமிக்கு அழைப்பு.

அடுத்துவரும் அரசாங்கசபைப் பொதுத்தேர்தலில், ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்கள் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு அபேட்சகராக வரவேண்டுமென்று அன்னவரை விநயத்துடன் வேண்டிக்கொள்வதாக, காரைநகர்க் கிராமச் சங்கம் சர்வாங்கீகாரமாக ஓர் நிர்ணயத்தை நிறைவேற்றியிருக்கிறது.

## லைசென்ஸ் இல்லாத் துப்பாக்கி.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை என்பவர் லைசென்ஸ் இல்லாமல் ஓர் துப்பாக்கியை வைத்திருந்தார் என பருத்தித்துறைப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார்.

விசாரணையின்போது, ஷை துப்பாக்கி பழுது அடைந்திருப்பதாகவும், அதனைத் தாம் உபயோகிக்க முடியாது என்றும் எதிரி கூறினர்.

நீதிபதி ஷை துப்பாக்கியைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டதுடன், எதிரிக்கு 5 ரூபா அபராதமும் விதித்தார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஷு
மார்கழிமீ ககவ வியாழக்கிழமை

## யாழ்ப்பாணத்திற் சுருட்டுத் தொழில்

பெரும்பான்மையும் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணச் சங்கத்தினர் இப்பொழுது அவ்வளவில் நின்றுவிடாது இங்குள்ளார்க்கு உண்மையிற் பயனளிக்கும் கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் என்னுமிவைகளைச் சீர்திருத்தும் விஷயத்திலும் ஈடுபட்டிருக்கின்றனரென அறியக் கிடத்தல் மகிழ்ச்சிக்கு இடமாகும்.

ஆளப்படுஞ் சாதியினராகிய இலங்கை மக்கள் அரசியற் கருமத்தில் ஈடுபட்டுக் கொண்டே காலம் போக்குவதைக் காட்டிலும் மேலே சொல்லப்பட்ட தொழில்களைச் சீர்படுத்துவதிலும் விருத்தி செய்வதிலும் காலங்கழிப்பரேற் செல்வஞ் செவாக்கு உண்டாகும்; நாடு ஈடேற்றமடையும். நமது யாழ்ப்பாண சங்கத்தார் சென்ற சில வாரங்களிற் றாம் கூடிய கூட்டங்களில் சீமேர்துத் தொழில், வடமாகாணப் புகையிரதச் சீர்திருத்தம் குன்றி வரும் புகையிலைச் சுருட்டுத்தொழிலையும் வியாபாரத்தையும் விருத்தி செய்தல் முதலியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்து அவற்றின் நன்மையை யிட்டு உழைத்தற்குத் தலைப்பட்டிருக்கின்றனர்.

சுருட்டுத்தொழிலைச் சீர்ப்படுத்தி அதன் வியாபாரத்தையும் விருத்தி செய்யும் நோக்கமாகச் சென்ற சில வாரங்கட்கு முன், மேற்படி சங்கத்தார் கூடிய கூட்டத்தின் வரலாற்றையும் அவர்களுடைய அறிக்கைப்பத்திரத்தையும் இற்றைப் பிரசுரத்திற்கு முந்தியே சில பிரசுரங்களிற் சுருக்கமாக மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தோம். அச் சங்கத்தார் அறிக்கைப்பத்திரத்தில் எடுத்துக்காட்டியுள்ள பிரேரணைகளனைத்தும் யாழ்ப்பாணச் சுருட்டுத்தொழிலை விருத்தி செய்தற்குச் சாதகமாகவுள்ளன. ஆனால் நமது யாழ்ப்பாணத்து விவசாயிகளும் தொழிலாளிகளும் முதலாளிமாரும் பெரும்பான்மையும் கைத்தொழில் கமத்தொழில் வியாபார மென்னுமிவைகளைப் பற்றி ஞானமில்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். அயல் நாடுகளிலே இவைகளைச் சீர்ப்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும் அந்த அந்த நாட்டினார் எந்த எந்த உபாயங்களைக் கைக்கொள்ளுகிறார்கள் எவ்வெவ் முயற்சிகளைச் செய்கிறார்கள் என்ற இவைகளைப்பற்றி இவர்கள் அறிவதுமில்லை; அறிய விரும்புவதுமில்லை. ஆதலால் நமது யாழ்ப்பாணச் சங்கத்தினரும் சனப்பிரதிநிதிகளாய் வருபவர்களும் பட்டின சங்கத்தார் கிராமச் சங்கத்தார் முதலாகச் சொல்லப்படும் பொறுப்பு வாய்ந்த பரிபாலன கூட்டத்தவரும் ஏனைய அபிமானிகளும் குறித்த தொழிலாளர் விவசாயிகள் வியாபாரிகட்கு முறையே கைத்தொழில் கமத்தொழில் வாணிபம் என்னுமிவைகளைச் சீர்ப்படுத்துவதற்கும் விருத்திபண்ணி ஊதியம் பெறுதற்குமான மார்க்கங்களை ஆய்ந்தறிந்து உடனின்று காட்டிக் கொடுத்தல் வேண்டும். இப்படிச் செய்யின் காலகதியில் இவர்களுடைய உதவியின்றி அவர்கள் தாமே பயின்று முயற்சி செய்வார்கள்; யாழ்ப்பாண மக்கள் எவரேனிலும் இயல்பாகவே விவேகம் படைத்தவரென்பது உலகப் பிரசித்தம்.

இனி, சுருட்டுத்தொழிலை விருத்திபண்ணுவதற்குப் பிரதானமான உபாயமொன்றை நமது யாழ்ப்பாணச்சங்கத்தினரும் மறந்துவிட்டனரென்று நினைக்கின்றேம். இந்த யாழ்ப்பாணத்திலே சாலந்தோறும் செலவழியும் "பீடி" "சிக்கறற்" என்னுமிவைகள் மிக அதிகப்படலாயின, அந்நிய நாட்டுப் பொருள்களாகிய இவைகளை ஆர்வத்துடன் வாங்கிப் புகைப்பவர்களுட் கூடிய தொகையினர் நமது யாழ்ப்பாணத்தவர்களேயாவர். இவர்கள் இப்படிச் செய்துகொண்டு தமக்கும் தம் நாட்டினர்க்கும் சீவிய ஆதாரமாகவுள்ள சுருட்டைப் புறக்கணித்துவா, அந்நிய நாட்டினர் இச் சுருட்டை வாங்கி உபயோகிப்பரென்று எப்படிக் காத்திருக்கலாம்? சுருட்டுப் புகைக்கும் பழக்கமில்லாதவர்கள்தவிர ஏனைய யாழ்ப்பாணத்தவர்கள் தம்முரில்வசிப்பவராக, உலகத்தில் எந்த மூலையில் வசிப்பவராக "யாழ்ப்பாணத்தவன் யாழ்ப்பாணச் சுருட்டினையன்றி வேறு எதனையும் உபயோகிப்பதில்லை" யென்ற நியதிபூண்டவராக நடத்தல் வேண்டும். சுருட்டுத்தொழிலை விருத்தி பண்ணுவதற்கு இதுபோற் சிறந்த உபாயம் பிறிதொன்றுமில்லையல்லவா?

மேலும், அடிமைச் சாதியினராகிய நாங்கள் எத்தொழிலைச் செய்து ஈடேறுவதற்கும் நம்மையாளும் அரசினரின் துணை இன்றியமையாததாகவிருக்கின்றது. ஆனால் அரசினரேனிலோ தம் செய்கையினால் எங்கள் தொழின் முயற்சிகட்கு அநுகூலத்தைத் தேடிவிடாது பிரதிகூலத்தைச் செய்வதனால் நாங்கள் இப்பொழுது 'பிச்சை வேண்டாம், நாயைப்பிடி' யென்ற நிலைமையில் இருக்கின்றேம். எங்ஙனமெனிற சொல்லுதும்: எங்கள் புகையிலை, இலங்கை முழுவதிலுமுள்ள தேங்காயாகிய பொருளகளுக்கு மலையாளத்திலும் இந்தியாவின் வேறு சில ஊர்களிலும் மானமுண்டு; இதனாற்றான் விலை குன்றிக் கிடந்த தேங்காய் பின் விலையேற, பணமுட்டுற்றுச் சங்கடப்பட்ட இலங்கை மக்கள் பழையபடி தேங்காய் வியாபாரத்தினால் ஊதியமடையலாயினர். நமது யோசனையற்ற அரசினர் இந் நன்மைகளையிட்டுச் சிந்தித்தலின்றி, இங்குளளாரின் உணவுப் பொருள்களாய் இந்தியாவிலிருந்து வரும் நெய் முட்டை கிழங்கு வகைகளுக்குச் சுங்கவரியை இரு மடங்கு மும்மடங்கு உயர்த்தி விதித்தனர். இதனால் நஷ்டமடைந்து சீற்றங்கொண்ட சென்னை அரசாங்கத்தார் "செய்தார்க்குச் செய்வார்சேத்தபிறகா" என்றுங்கு, இலங்கையிலிருந்து போய் அந்த இறக்குமதியாகும் தேங்காய்க்குச் சுங்கவரியை அதிகம் உயர்த்தி விதித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் புகையிலையின் கதியும் அப்படியேயாகும்; இப்படியே நமது அதிகாரிகள் யோசனையின்றிச் செய்யும்செயல்களினால் இங்குள்ளார் உணவுப் பொருள்கள் விஷயமாகக் கஷ்டபடவும் வேற்று நாடுகளுடன் வியாபாரஞ் செய்து ஊதியமடைய முடியாது சங்கடப்படவும் எங்களை வைத்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தவரின் பிரதான முயற்சியாயுள்ள இச்சுருட்டுத்தொழிலை விருத்தி பண்ணுவதற்குப் பயன்படும்படி ஒரு முன்மாதிரித் தொழிற்சாலையை அரசினர் ஸ்தாபித்துத்தரல் வேண்டுமென்று இங்குளளார் பன்முறை ஓலமிடவும் நமது அரசினர் கேட்டுங் கேளார் போல் வாளாவிருக்கின்றனர். இப்படித்தானே நாட்டு முயற்சுகளை ஈடேற்றுவது? அரசினரிடத்தில் இந்த அலட்சியம் இருக்குமானால் அவர் கீழ்ப்பட்ட நாம் எப்போதாயினும் ஆட்படமார்க்கமுண்டோ? ஆதலின் யாழ்ப்பாணச்சங்கத்தாரும் நமது சனப்பிரதிநிதிகளாய் வருவோரும் இப்படியான கருமங்களில் வாதாடி அரசினர் கொண்டுள்ள அலட்சியத்தைத் தவிர்த்து அரசினரை எங்களுக்குத் துணைபுரியும்படி ஊக்கப்படுத்துதல் ஆவசியகமாகும்.

### மிஸ்ரர் ஈடன்?

சொல்வதொன்று செய்வதொன்று என்பதே இராஜ தந்திரம் எனக்கொண்டு அத்தந்திரத்தை விளக்கு போலக் காட்டமுனைந்ததன்பயனாகப் பதவியிழந்த நமது பழைய ஆசாமி சர் ஸமுயல் ஹோரின் இடத்திற்கு இதுகாறும் சர்வதேசசங்கத்தில் பிரிட்டிஷ் மந்திரியாயிருந்த மிஸ்ரர் அந்தோனி ஈடனைப் பிரதம மந்திரி மிஸ்ரர் பால்டுவின் நியமித்து விட்டார் என்ற செய்தி, பிரிட்டிஷ் நீதியில் இப்போது சிலகாலமாக அவநம்பிக்கை கொண்டிருந்தார்க்கு மீண்டும் நம்பிக்கையைக் கொடுக்க ஏதுவாகும் என்பதே எமது அபிப்பிராயம். மிஸ்ரர் ஈடனின் நியமனத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும் இற்றலியப் பத்திரிகைகள் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. மிஸ்ரர் ஈடனின் நியமனம் இற்றலிக்குச் செருப்படி தந்ததுபோலாகும், என்று ஓர் பிரபல்ய இற்றலிய அரசியல்வாதி கூறியதில் இருந்தே இற்றலி தனது "மூலம் இலக்கப்பகைவரான" மிஸ்ரர் ஈடன் நியமனத்தையிட்டு எவ்வாறு அஞ்சுகின்றது என்பது புலப்படும்.

மிஸ்ரர் ஈடனின் நியமனத்தினால், இற்றலிக்கு விரோதமாக எண்ணெய் நிர்ப்பந்தவிதி சர்வதேசசங்கத்து ஆதரவில் அமுலுக்கு வருதல் துரிதப்படும் என காட காத்திருக்கலாம். எண்ணெய் நிர்ப்பந்தத்தைச் சர்வதேசசங்கம் விதிக்குமானால், அது ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு வழிதேடிய மாதிரியாகும் என்று முசோலினி ஏற்கெனவே பொதுவாக வல்லரசுகட்கும் சிறப்பாக இங்கிலாந்திற்கும் அறிவித்துவிட்டது, முசோலினியின் மிரட்டலுக்கு இங்கிலாந்து அஞ்சவில்லை என்பதே மிஸ்ரர் ஈடனின் நியமனத்திலிருந்து காம் யூகிக்கத்தக்கதாய் இருக்கிறது. அப்படியான யுத்தமொன்று ஏற்பட்டு இற்றலி பிரிட்டிஷ் கப்பற்படையைத் தாக்கினால், இங்கிலாந்துக்கு உதவி செய்யப்பல வல்லரசுகள் தாம் தயாராயிருப்பதாக அறிவித்துவிட்டன.

எனவே இனி ஜெனிவாவில் நடப்பது என்ன?

# கண்ணோட்டம்.

### சிந்திப்பாரா?

நமது வடபகுதியில் "ட்ரொலி"ப் பிரயாணிகள் படுங் கஷ்டங்களை விளக்கி, "ட்ரொலிப் பிரயாணி" என்னும் ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றினை அடுத்த பக்தியில் பிரசுரித்திருக்கிறேம். அக் கடிதத்தினை நம் புகைரதப்பகுதித் தலைவர்க்கும், போக்குவரத்துப் பகுதி மந்திரிக்கும சமர்ப்பிக் கின்றேம்: இந்த இலங்கை முழுவதிலும், வட புகைரதப் பகுதியே பிரயாணிகளுக்கு மிக்க வசதியினம் கொடுக்கிறது. ஆனால், இப் பகுதியில் இருந்தே அரசினர்க்குக் கூடியவருமானம் கிடைக்கிறது என்பது மறுக்கொணு உண்மை. ட்ரொலி நிலையங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள் மிகவும ஆவசியகமே என்பதையும், இத் திருத்தங்களைச் செய்து பிரயாணிகளுக்குப்போதிய சௌகரியத்தை அளிக்காவிட்டால், மோட்டர் பஸ் எதிரிடையை ஒருபோதும் குறைக்கமுடியாது என்பதனையும் புகைரதப் பகுதியார் உணர்க்து கன்றென்பனவற்றை இன்றே செய்வார்களாக.

### இதுவும் ஓர் நீதியே!

இங்கிலாந்திலே கிளிபோர்ட்பிரபு என்னும் பிரபு ஒருவர்உளர். இவர் இற்றைக்குச் சில மாசங்களுக்கு முன், தமது மோட்ட ரதத்திற் செல்லும்போது ஒருவனைத் தட்டி நெரித்துக் கொன்றுவிட்டார் என்று நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டார். பிரபு குடும்பத்தைச் சேர்ந்த இவர் என்செய்வதென்று மிரள மிரள விழித்தார். உடனே இவர்க்கு ஓர் ஆலோசனை தென்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன் ஜோன்மன்னர் பிரபுக்களுக்கு "மக்ன கார்ட்டா" என்னும் ஓர் சட்டத்தை வழங்கினர், அதன்படி பிரபுக்களாயுளளார், தமது இனத்தவர்களால் அதாவது பிரபுக்களால் விசாரணை செய்யப்படவேண்டுமேயன்றி சாதாரண நீதிஸ்தலத்தினால் விசாரணை செய்யப்படவொண்ணாது என்பதைக் கண்டார். அதன்படி மறுச் செய்ய, அவர் மறு அங்கீகரிக்கப்படலாயிற்று: எனவே அவர் இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையில் பல வைபவங்களுடன் விசாரணை செய்யப்பட்டு ஈற்றில் விடுதலையடைந்தார். இதுவும பிரிட்டிஷ் நீதியின் ஓர் அம்சம் என்றே காம் எண்ணுகிறேம். இனம்இனத்தினால்தான் விசாரணை செய்யப்படவேண்டும் என்ற விதியை எல்லாவிடத்திலும் பிரயோகித்தால் கலம்பயக்காதா என்று கேட்கிறேம். உதாரணமாக, கள்வர் கள்வராலும், கொலைபாதகர் கொலைபாதகராலும், கொள்ளைக்காரர் கொள்ளைக் கூட்டத்தினராலும் விசாரணை செய்யப்பட்டால், உலகிற் சிறைக்கூடங்கள் ஏன், கொலைக்களங்கள் ஏன்?

### பலஸ்தீனத்திற்குச் சுயராஜ்யம்.

பலஸ்தீனத்திற்குச் சற்று அரசியற் சீர்திருத்தம வழங்க பிரிட்டிஷ் அரசினர் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால் இதற்கு யூதர்கள் ஆட்சேபிக்கின்றனர்.

# காணமற்போனவர் கதி.

## தட்டாதெருக் கடைக்காரரின் மரணம். நிலாவரைவாவியில் பிரேதம்.

## புதைக்கப்பட்டபின் சுற்றத்தவர் நாட்டம். பின் வீட்டிற்கொண்டுவந்து தகனம்.

(நமது நிருபர்.)

உரும்பராயில் வசித்துப் பின் வண்ணார்பண்ணை தட்டாதெருவிற் கடைவைத்திருந்த வைத்தியலிங்கம் என்னும் 60 வயதுடைய ஒருவர் சென்ற 21-12-35 அன்று தமது மனைவியுடனும் மகனேடும் வாக்குவாதப்பட்டு வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டார். சென்ற செவ்வாய்க்கிழமை வரையும், அவர் வீடு திரும்பி வாராமையினால் அவர் சுற்றத்தவர் அவரைத் தேடித்திரிந்தனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை, நிலாவரை வாவியில் ஓர் பிணம் மிதப்பக் கண்டு, பொலிஸர்க்கு உடையாரால் அறிவிக்கப்பட்டது. பொலிசார் ஆங்குச்சென்று பார்த்தபோது, பிரேதம் அழுகிய நிலைமையில் முடை நாற்றத்துடன் காணப்பட்டது. பொலிசார் தங்கள் விசாரணையை முடித்துக்கொண்டு பிரேதத்தைப் புதைத்துவிட்டனர்.

இவ்விஷயத்தைக் கேள்வியுற்ற காணமற்போனவரின் சுற்றத்தவர்கள், ஆங்குச்சென்றுபுதைக்கப்பட்ட பிரேதத்தைக்கண்டு அது தம் சுற்றத்தவரான வைத்தியலிங்கத்தினதே என்று ருசுப்படுத்தி தம் வீட்டிற்குக் கொண்டுவந்து பின் முறைப்படி தகனம் செய்தனர்.

### காலநிலை.

நேற்றுச் சிறிது மழை வெளித்திருந்து பின்னர் இன்றுமழை தொடங்கியிருக்கிறது. குளிரோடு கூடிய கடுங்காற்றும் இடையிடையே வீசுகின்றன; எங்கு பார்த்தாலும் வெள்ளமயமாகவே காணப்படுகின்றது.

## புகைரதப் பகுதி தலைவர்க்கு.

### "ட்ரொலி" நிலையங்களில் வசதி.

### பிரயாணிகள் படும் கஷ்டம்

("ட்ரொலிப்" பிரயாணி வரைவது)

இலங்கைப் புகைரதப் பகுதியின் "ட்ரொலி" வண்டியிற் பிரயாணம் செய்வோர் படும் கஷ்டங்களோ அதிகம். இந்த ட்ரொலிகள் வந்து தங்கிப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் நிலையங்களோ மிகவும் வசதியினத்தையுண்டுபண்ணுவதாயிருக்கின்றன. தக்க உயர்ந்த மேடைகள் இன்மையினால், பிரயாணிகள், அவர்களிலும் விசேஷமாக முதியாரும், பெண்களும், பாலர்களும், ட்ரொலிகளில் ஏறுதலும் இறங்குதலும் மிகவும் கஷ்டமாயிருக்கிறதை ட்ரொலிப் பிரயாணம் செய்வோர் அவதானித்திருக்க முடியும்.

#### பாதுகாப்பு

இனி, இந்த நிலையங்களில் பிரயாணிகள் வெயில், மழை என்பனவற்றில் மிகவும் கஷ்டமடைகின்றனர். இந்த இடங்களில் வெயில் மழை எனபனவற்றில் இருந்து பிரயாணத்திற்காயத்தமாய் ஆங்குவந்து காத்து நிற்கும் பிரயாணிகளைப் பாதுகாக்கக்கூடியதான அமைப்பு ஒன்றும் இல்லை. இந்த நிலையங்களிற் பல வசிப்பனைக்குத் தூரத்திலேயே இருக்கிறபடியால், பிரயாணிகள், ட்ரொலி வரும் சத்தம கேட்டவுடன் தம் வீடுகளில் இருந்து ஓடிவர முடியாது. பல நிமிஷ நேரத்திற்கு முன்னரேயே வந்து இந்த நிலையங்களில் 'ட்ரொலி' வரும் வரைக்கு காத்திருக்க வேண்டும்.

#### செலவு அதிகம் இல்லை.

ட்ரொலி தங்கும் நிலையங்களில் காத்துநிற்கும் பிரயாணிகளை வெயில் மழை எனபனவற்றிலிருந்து பாதுகாத்தற்கு தகரத்தினால் வேயப்பட்ட சிறு தாள்வாரங்கள் இறக்கினாலும் போதுமானது. இவற்றை நிறுவுதற்குத் தனித்தனி 10 ரூபாய்க்கு மேல் செலவு பிடிக்காது. எமது வடபகுதிப் புகைரதவாயிலாக அரசினாககுப்போதிய இலாபம் கிடைக்கின்றது. கிடைக்கும் இலாபத்திற்குத் தக்கதாய், பிரயாணிகளுக்குச் சௌகரியம் கொடுத்தல் புகைரதப் பகுதியாரது கடமையாகும். இன்னும், இலங்கைப் புகைரதப்பகுதி அரசினரால் நடத்தப்பபடுவது அன்றித் தனித்தனிச் சமுதாயத்தினரால் நடாத்தப்படுவது அல்ல.

#### பஸ் எதிரிடை

இப்போது பஸ்களின் எதிரிடையினால் புகைரதப்பகுதியின் வருவாய் மிகவுங் குறைந்துவிட்டது என அரசினர் கூக்குரல் இடுகின்றனர். உண்மையைக் கூறுங்கால், பஸ்காரர் பிரயாணிகளுக்கு அளிக்கும் சௌகரியங்களைப் புகைரதப் பகுதியார் அளிக்கத்தவறியமையே இவ்வருமானக்குறைவுக்குக் காரணமாகும் என்பதை எவரும் ஒத்துக்கொள்வார். ட்ரொலி நிலையங்களில் பிரயாணிகளுக்கு மேலே காட்டப்பட்ட விதமச் சௌகரியங்கள் அளிப்பது, இன்னும் அதிகப் பிரயாணிகளைப் புகைரதத்திற்கு வசீகரிக்க ஏதுவாகும் என்பதே என்போன்ற பிரயாணிகளது மனத்திடமான நம்பிக்கையாகும்.

### வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், மற்ற பொது வேலைகள் அபிவிருத்திக்கும் இந்திய அரசினர் கூடிய சீக்கிரம் 15 கோடி ரூபாய் வரை கடன் வாங்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.


## செவ்வந்திப் பூக்கள்.

மஞ்சள் நிற வெள்ளை நிற அன்றன்றலர்ந்த செவ்வந்திப்பூக்கள் போதிய அளவு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை சகாயம்.

கா. சுந்தரஐயர்.
கொக்குவில் கிழக்கு
(Mis. 235. 26-9-35 to 9-1-36.) வி.

## தமிழர் ---

# அவர்களின் கடமையாது?

## அரசியற் கொள்கையில் மூவிதச் சாரார் அமிதவாதிகளின் அறிவிலாப் பேச்சு.

## பிரிட்டிஷார் இங்கே வந்தது ஏன்?

[ஸ்ரீதரன் எழுதுகிறார்]

### சுயநலப் புலிகள்.

இந்த இலங்கையில் வதியும் சிங்களர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் என்பவர்களுக்கிடையே பரஸ்பரம் ஒற்றுமை நிலவவேண்டும் ஒற்றுமையுண்டெனில் தான் நாம் சுபீட்சமடையமுடியும் எமக்குள்ளே வேற்றுமையிருக்கும் வரையில் எமது பிறப்புரிமையாம் சுயராச்சியத்தை நாம் ஒருபோதும் பெறமுடியாது. இந்த ஒற்றுமையை நாட்டுவது பொறுப்புடைய ஜனத்தலைவர்களது கடமையாகும். கெல்லுட் பதர் போல ஒவ்வோர் சாகியத்தார் மத்தியிலும் சில சுயநலப் புலிகளான விஷமிகள் இருக்கின்றனர். இவ்விஷமிகள் தம் சுயநலவாசையைப் பூர்த்தி செய்தற்காகக் கேவலம் வகுப்புப் பிரிவினைகளையும், சாதிச் சண்டைகளையும் உண்டாக்கிப் பிரித்தாளும் தந்திரமுடையாரிடம் சரணாகதியடைந்து அதன்பயனாகப் பட்டமும், பதவியும் பெறுகின்றனர் இத்தகையவர்களினாலேயே எமநாடு இன்னும் ஈடேறமாட்டாது தவித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சுயநலப் புலிகளின் பசப்புமொழிகளுக்குப் பாமரர்கள் செவிசாய்த்து ஏமாற்றமடையாதபடி பார்த்துக்கொள்ளல், நாட்டின் நலனை விழையும் எல்லோரதும் கடமையாகும்.

### மூவிதச் சாரார்.

எம்நாட்டில்—யாழ்ப்பாணத்தில்-3 வித அரசியற் கொள்கையுடையோருளர். தமிழராகிய நாம் சிறுபான்மையினர், நாம் நன்மையடைய வேண்டுமாயின் பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்கவேண்டும்; அவர்கள் எமக்கு விசேஷ உரிமைகளை வழங்குவர் என்பது ஒரு சாரரது கொள்கை. இன்னொரு சாரார், எப்படியாவது நாம் சிங்களருடன் ஒத்துழைக்க வேண்டும்; அவர்களே பெரும்பான்மையினரானமையால் அவர்களுடைய தயவின்றி நாம் ஒன்றும் செய்யமுடியாது என்னும் கொள்கையாளர் ஆவர். இந்த இரு கொள்கையாளரும், அரசியல் நிலையை உள்ளவாறு உணராத அமிதவாதிகள் ஆவர். இவ்விருசாரரும் கொண்டுள்ள கொள்கை கோழைத்தனத்தையும் பேடித்தனத்தையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. தமிழ்மக்களது புராதன நாகரிகத்திற்கு ஒவ்வாதது. இவ்விருவிதக் கொள்கைக்கும் இடையாய் பிரவாதக் கொள்கை ஒன்றுண்டு. அதாவது தமிழ் மக்களாகிய நாம் எமது சாதி, சமயம், பாஷை முதலியனவற்றை அந்நியர் தம்கரங்களினால் பாதக்காதபடி காதட்டிக்கும், எமது பொருளாதார அரசியல் சம்பந்தமான நியாய நீதியான உரிமைகளுக்குப் பங்கம் விளைப்பதைத் தடுக்கும் பாதுகாப்புகளுடனும் சிங்களருடன் மாத்திரமல்ல இலங்கையிலுள்ள எல்லாச்சாதியருடனும், தேசிய முன்னேற்றத்தின் கேதுவான பொது விஷயங்களில் ஒத்துழைக்க வேண்டும் என்பதே இக்கொள்கையினையே அன்றுதொட்டு இன்றுவரை நமது "இந்துசாதனம்" அநுசரித்து வருகின்றது என்பதை அபிமானிகளுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேம்.

### இவர்கள் வந்தது ஏன்?

பிரிட்டிஷார் 6000 மைல்கள் கடந்து இந்த இலங்கைக்கு வந்தது ஏன் என்பதை மேலே காட்டப்பட்ட முதற் கொள்கையாளர்க்கு எடுத்து விளக்க விரும்புகின்றேம். தமது தேக நிலைக்கு ஒத்துப்போகும் சீதன பூமியாகிய இங்கிலாந்தை விடுத்து, பல கஷ்டங்களுக்கிடையே கடல் கடந்து பன்னாட் பிரயாணம் செய்து உஷ்ணபூமியாகிய இந்த இலங்கைக்கு பிரிட்டிஷார் சும்மா வரவில்லை. தமிழரையோ, முஸ்லீம்களையோ, பறங்கியரையோ அல்லது வேடர் முதலாம் ஏனைய சிறுபான்மைச் சாதி பாரையோ, பெரும்பான்மையினராய சிங்களரிடம் இருந்து காப்பாற்றுவதற்காக வரவில்லையென்பதை அக்கொள்கையாளர்க்குத் தெருட்ட விரும்புகின்றேம். தமது சொந்த நலன்களைப் பூர்த்தியாக்குதற்கே பிரிட்டிஷார் இங்குவந்தார் என்பதை அவர்களே ஒத்துக்கொள்வர்.

### அரசியற் திருத்தம்.

இப்போது அமுலில் இருக்கும் டொனமூர் அரசியற்றிட்டம் நூதனமானது. சுயராச்சியம் பெறுவதற்கு எமக்குமுட்டுக்கட்டையிடுவது: இதனை நன்குணர்ந்த தமிழ் மக்கள் இத்திட்டத்தின்மீது தமக்குள்ள வெறுப்பிற் கறிகுறியாகப் பகிஷ்கரித்தனர். இப்பகிஷ்காரம் தொடர்ந்து நடாத்தப்பட்டிருக்குமானால்- பெரும்பான்மையினரான சிங்களர் பட்டம், பதவியென்னும்மாயவலைக்குள் வீழ்ந்து சிக்காதிருப்பார்களானால், இப்போது உள்ள கேவலநிலைமை ஏற்பட்டிருக்காது. இது நிற்க, இந்த அரசியலின்படி ஜனப் பிரதிநிதிகளுக்கு உண்மையான அதிகாரம் இல்லை: சர்வ அதிகாரங்களும் தேசாதிபதிக்கும் அவரது ஆதரவு பெறும் 3 வெள்ளை உத்தியோகத்தர்க்குமே அளிக்கப்பட்டிருக்கின்றன இவ் அதிகாரத்தை நீக்கவேண்டும், அல்லது கட்டுப்படுத்தல் வேண்டும்; உத்தியோகத்தர் நியமனச் சபையில் இலங்கையரே இருத்தல் வேண்டும்; இப்போதுள்ள 3 வெள்ளையுத்தியோகத்தரும் நீக்கப்பட, அவர்களிடத்திற்கு அரசாங்கசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிமார்கள் தெரிவு செய்யப்படல்வேண்டும் எனச் சிங்களமக்கள் கோருகின்றனர். நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிய சிறுபான்மையினரும் இக்கோரிக்கை நியாயமானதே என்பதை ஒத்துக் கொள்கின்றனர். ஆனல், எம்மில் ஒரு சாரார்—அதாவது எம்மால் மேலே கூறப்பட்ட 1-வது சாரார்—தேசாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கவொண்ணுது; குறைத்தால் சிங்களமக்கள் எமமை அப்படியே விழுங்கிவிடுவர் என்று உம்மாண்டி காட்டுகின்றனர்.

### உபயோகித்தாரா?

சிறுபான்மையினருக்கு விரோதமாகப் பெரும்பான்மைச் சாதியினர் ஏதும் கர்மம் ஆற்றினால், தமக்கு உள்ள இந்த விசேஷ அதிகாரத்தைக்கொண்டு தேசாதிபதி அதனைத் தடுப்பார் என்று மேலே காட்டப்பட்டவர் கூறுகின்றனர். இவர்கள் கூற்று எவ்வளவுக்கு உண்மையாயிருக்கிறது சிங்கள பக்கள், தமிழர்க்கு விரோதமாகப் பல காமங்கள் ஆற்றினர் என்று ஒடி சாரார் குற்றம் பாரிக்கின்றனர். (1) உத்தியோகநியமன விஷயத்தில் சிங்களர் தம்மவரையே நியமித்தனர். (2) வடபகுதியில் இருந்த ஆஸ்பத்திரிகளை எடுத்து, தமது ஊர்களுக்கு மாற்றினர். (3) இங்கிருந்த விவசாயக் சந்தோரை அநுராசபுரத்திற்கு மாற்றினர்- (4) திருநெல்வேலி மாதிரித் தோட்டத்திற்கு அளிக்கப்பட்டு வந்த மானியத்தைக் குறைத்தனர். (5) கமத்தொழில் கைத்தொழில் விருத்தியில் எமக்கு ஒன்றும் செய்யவில்லை. (6) கிளரிக்கற் பரீட்சையின் பாடவிதானத்தைச் சிங்களர்க்கு வசதியாக மாற்றி யமைத்தனர் என்பனவே சிலர், சிங்களர் மீது சாட்டும் குற்றங்களாகும். இப்படியெல்லாம் குற்றங்கள் சிங்கள மக்கள் செய்தனர் என ஸ்ரீமான் மகாதேவா போன்றோர் கூறுகின்றனர். இவர்களின் கூற்று சரியாயிருக்கலாம் அல்லது பிழையாயிருக்கலாம். ஆனல், தேசாதிபதியானவர் தமது விசேஷ அதிகாரங்களைக் கொண்டு இக்குற்றங்கள் நடப்பதைத் தடுத்தாரா? தடுக்க நினைத்தாரா? என்று ஒடி கோஷ்டியினரைக் கேட்கிறோம்.

—வரும்.

## கடிதம்.

இந்துசாதனத்தின் 'வாசவன்' என்னும் வாசகருக்கு:

அன்பனே!

நீங்கள் என்னுடைய அன்பன் என்னு கையொப்பம் உங்கள் கடிதத்தில் இட்டபடியால் உங்களை அப்படி அழைக்கின்றேன். இனிமேல் நீங்கள் பரியாசையாயும் உங்கள் உண்மையான பெயரோடும் எழுதினால் மறுமொழி எழுதுவேன். இல்லாவிட்டால் பதில் எழுதமாட்டேன்.

உங்கள் கடிதத்தில் கேள்விப்படுகிறதாயும் சரியோபிழையோ வென்று தெரியாதென்றும் எழுதப்பட்டிருக்கிறது. உண்மையோ பொய்யோ வென்றும், சரியோபிழையோவென்றும், அறிமுன் அறிவுடையோர் அப்படி எழுதப்படார்.

புத்தூர்க் கிராமச்சங்கத்தைப்பற்றி அல்லது நான் நடப்பிக்கும் முறையைப்பற்றி அயற்கிராமங்கள் கூறுவதற்கும் உங்களுடைய வரைச்சனுக்கும் மெத்தமுரணிருக்கிறதை அறியவும்.

சபைகளில் உங்களரியையும் என்னையும் கண்டீர்களா? அப்படிக்கண்டிருந்தால் நீங்களும் சபையோரும் ஆர் அரி, ஆர் நரி, அல்லது இருபேரும் அரியோ, அல்லது இருபேரும் நரியோ வென்று கூறுவதே சரியாயிருக்கும். அதற்கு முன் கூறுவது பெருந் தவறு.

கைக்கூலிக்கு வகைகள் கொடுத்து வாக்காளரை முறைதப்பி நடக்கவா செய்வாரோ அவருக்கு மாறாக இருக்க வேண்டுமென்றே கூட்டங்களில் சொல்லியிருக்கின்றேன். அந்த நோக்கத்தைநிறைவேற்றவும் பொது அரசியல் விஷயங்களைத் தீர்மானிக்கவும் கிராமங்களின் 'வட்டாரங்களில் வட்டாரச் சபைகள் அமைக்கப்படும். என்னை நீங்கள் அறியமுன்னும் நீங்கள் ஆரென்று சொல்ல முன்னும் உங்களுடைய புத்திமதியைப் புத்திமதியாய் எண்ணமாட்டேன்.

தூஷிப்பையும், பரிகாசத்தையும் நீங்களும் என்னைப்போல் தவிர்த்துக் கொண்டால் நல்லாயிருக்கும்

பத்திரிகைகளும் அப்படிச் செய்தால் இன்னும் நல்லது.

இப்படிக்கு,

த. இராமநாதன்.

## சிவில் சேர்விஸ் நியமனங்கள்.

### புத்தளம்.

கச்சேரி உதவித் தலைவராக ஸ்ரீ R. சிந்தாமணி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### கொழும்பு

கொழும்புப் பொலிஸ் நீதிபதியான மிஸ்ரர் R. H. D. மாண்டர்ஸ் ஜனவரி 20-ம் தேதி லீவில் இங்கிலாந்துக்குச் செல்ல அவர் வரும்வரை மிஸ்ரர் J. N. ஆறுமுகம் பொலிஸ் நீதிபதியாகக் கடமை பார்ப்பார்


யாழ்ப்பாணம்
கலாசங்க வெளியீடு ௧.
பதிப நட்டுச் சீவன சாஸ்திரம்.
5 பாகம்; 400 பக்கம்; 6-ம் வகுப்புத் தொடக்கம் எல்லாவகுப்புகளுக்கும் உபயோகப்படக் கூடியது. பிராணிகள், விவசாயம், தாவரம், சுகாதாரம் இடச்சர்பு, ஆகிய விஷயங்களடங்கியது.
1936-ம் ஹு ஜனவரி மீ 6உ வெளி வரும்: விலை ரூபா 1-75 சதம் கிடைக்குமிடங்கள்:-
மனோஹரா பிறஸ் பருத்தித்துறை
சைவவித்தியாசாலை திருநெல்வேலி
Mis 224 22 35 to 6-1-35.


## விஞ்ஞாபனம்.

நிகழும் யுவ ஹு மார்கழிமீ ௨௯உ (30 12 35) திங்கட்கிழமை சாயந்தரம் 6 மணியளவில் அராலி தெற்கு, சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் "வாணி விலாச சபை" ஆதரவின் கீழ் ஒரு பொதுக் கூட்டம், முடிக்குரிய நியாயதரந்தரர் திருவாளர் வை. துரைசுவாமி யவர்களை ஊர்காவற்றுறைப் பகுதிக்கு அரசாங்கசபை யங்கத்தவராக முன்வருமாறு கேட்கும் நோக்கத்துடன் கூடப் பெறும். அத்தருணம் அநுதாபமுடையோரனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்,

க. முத்தையா, அக்கிராசனர்,
சீ. செல்வத்துரை, காரியதரிசி,
வி. நாகலிங்கம், தனாதிகாரி,
வாணிவிலாச சபை, அராலி தெற்கு.

26-12-35. [Mis.236. 26-12-35]

# கடலில் நேர்ந்த ஆபத்து.

## 3 பேரைக் காணவில்லை.

## மற்றை மூவரின் அருந்தப்பு.

[நமது நிருபர்.]

மாதகமுனைக்கு நேரில் நடுக்கடலில் வரும்போது தங்கள் தோணி தவாரங்கண்டு நீரேறிக் கடலுள் மூழ்கிவிட தாங்கள் மாத்திரம் அரிய உயிரைக் காக்கவேண்டிக் கடலில் நீந்தி வந்த சமயத்தில் ஒரு மோட்டார் வள்ளத்தினால் மீட்கப்பட்ட மூவர் சொன்னவரலாறு மிகவும் பயங்கரமானது; அத்தோணிக்காரர் பின்வருமாறு சொல்லினர்.

"பண்ணைத் துறையிலிருந்து 22 மைல் தூரத்தில் நடுக்கடலில் நங்கூரமிட்டுநின்ற ஜர்மன்கப்பலில் சீமெந்து இறக்கிவரும்படி இந்த டிசெம்பர் 24 திகதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் 3 மணியளவில் இங்கிருந்து நாங்கள் 6 பேர் எங்கள் தோணியிற் புறப்பட்டுப் போனோம், போகும் போது எங்களுக்கு எவ்வகையான இடையூறும் நேரவில்லை. அந்தக் கப்பலிலிருந்து 112 பீப்பா சீமெந்து ஏற்றிக்கொண்டு மீண்டு வரும்போது மாதகமுனைக்கு நேரில், அந்தக் கப்பலிலேயே சீமெந்துப் பீப்பா ஏற்றிக்கொண்டுவந்த இன்னெரு தோணி எங்களை விலத்தும்போது எங்கள் தோணியில் முட்டவே உடனே எங்கள் தோணி தண்ணீர் கண்டு கடலுள் இருந்துவிட்டது மற்றத் தோணிக்காரர் எங்கள் அபாயத்தைக் கண்டுங் காணுதவர்போலப் போய்விட்டார்கள் இப்படியான அடாத செயல் தோணிக்காரர் எவரிடத்தேனும் முன்னெருபோது மில்லை. எங்கள் தோணி கடலுள் மூழ்கியதன்மேலும் பாய்மரத்தில் 8 அடி தண்ணீர் மட்டத்திற்குமேல் நின்றமையினால், நாங்கள் ஆறுபேரும் ஒரு பலகையை எடுத்துக்கொண்டு பாய்மரத்தில் ஏறி அப்பலகையை ஊஞ்சல் போலப் பாய்மரக் கயிற்றில் மாட்டிவிட்டு அதன்மேல் ஏறியிருந்துகொண்டோம். 10 மணித்தியாலம் இந்த நிலைமையில் இருந்தோம்; அதன்மேல் இருந்துகொள்ள முடியவில்லை; ஏதும் தோணிகளும் எங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. அந்தோணி ஜோசப்பு நாஜும் குசைப்பிள்ளையும் டானியலும் ஒரு பலகையை எடுத்துக்கொண்டு கடலிற் குதித்து அப்பலகையைத் துணையாகக் கொண்டு நீந்தினேம். ஐயாத்துரை, அந்தோணிப்பிள்ளை, செல்லத்துரை ஆகிய மூன்றுபேரும் பாய்மரத்திலேயே யிருந்தார்கள். ஏதும் வள்ளம் தோணி சந்தித்தால் நாங்கள் அதில் ஏறி அவர்களை மீட்டுவரலாமென்ற எண்ணத்தினுற்றான் முந்தி நீந்திப் புறப்பட்டோம்: நாலுமைல் வரையில் நீந்திவரும்போது கடலிற் கொந்தளிப்பு அதிகப்படலாயிற்று; இனிமேல் என்ன செய்யலாம் கடலுக்கு இரையாவதுதான் துணிவு என்று நிச்சயம்பண்ணிக்கொண்டு அல்லோலகல்லோலப்படும்போது, பாலைத்தீவிலிருந்து வந்த மோட்டர்வள்ளம் எங்கள் அபாயத்தான நிலைமையைக் கண்டு ஓடிவந்து எங்களை மீட்டு இங்கே கொண்டுவந்து கரைசேர்த்தது; மற்றை மூவருடைய கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை; அந்த 3 பேரில் அந்தோனிப்பிள்ளை கிழவன்; செல்லத்துரை அவருடைய மகன்."

இவர்கள் சென்ற இரவுதான் பண்ணைத்துறையை அடைந்தனர். இவர்கள் சொன்ன முறையீட்டைக் கேட்டவுடன் சில தோணிகள் அபாயம் நேர்ந்த அந்த இடத்திற்கு, இங்கிருந்து புறப்பட்டு விரைவாகச் செல்லுகின்றன.

# இற்றலியரின் ஏக்கம்

## அகப்பட்டுவிட்டதாகப் பரதவிப்பு. ஈடன் நியமனம்பற்றிப் பரபரப்பு.

## ஈடன் நியமனம் ஓர் செருப்படியாம்.

### கொடிய போர்

அக்ஸம் நகர்க்குத் தென்மேற்கே ஓர் கொடிய போர் நிகழ்ந்தது. இருபக்கத்திலும் சேதம் அதிகம்: ஈற்றில் அபிஸீனியர் வெற்றியடைந்தனர். அநேக இற்றலியப் பீரங்கிகளையும், பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான தாங்கிகளையும் அபிஸீனியர் கைப்பற்றி விட்டனர் என்று ஓர் செய்தி புகல்கிறது.

### மகத்தான வெற்றி

அக்ஸம்நகர்க்குமேற்கே எண்டாசிலஸி தெகலாய் என்னும் இரு இடங்களையும் அபிஸீனியர் இற்றலியரிடமிருந்து கைப்பற்றினர் என்றும் 10 தாங்கிகளைப் பிடித்தனர் என்றும் அடிஸ் அபாபாச் செய்தியொன்று செப்புகிறது;

### ஆயிரக்கணக்கானேர் சரண்.

சென்ற 15ம் திகதி நிகழ்ந்த அபிசீனிய வெற்றியின்பின்னர், இற்றலியர்பக்கமிருந்த படைவீரரில் ஆயிரக் கணக்கானேர் அபிசீனியரிடம் சரண்புகுந்தனர் என்று அடிஸ் அபாபாச் செய்தி ஒன்று கூறுகிறது.

### இற்றலியப்படையின் பெலவீனம்.

சென்ற 15ம் திகதி நிகழ்ந்த பெருந் தோல்வியின்பின், இற்றலியப் படையின் உற்சாகம் மிகவும் குறைந்துவிட்டது. இப்போது அவர்களுக்கு இருமருங்கிலும், றஸ்செயமும், டெஸ்ஜாஸ் மாச் என்னும் அபிஸீனியச் சேனுபதியும் போர்தொடுக்க ஆயத்தமாய்நிற்பதால், ஆபத்தான நிலையில் அகப்பட்டுவிட்டதாக அவர்கள் ( இற்றலியர் ) அஞ்சுகின்றனர்.

### மறுமொழி யில்லை

சமாசத்திட்டம் அழிந்து விட்டதென மிஸ்ரர் பால்டுவின் பாராளுமன்றத்திற் புகன்று விட்டபடியால், அச்சமாசத்திட்டம் சம்பந்தமாகத்தாம் மறுமொழியனுப்ப வேண்டிய அவசியம் இல்லையென்றும், யுத்தத்தைக் கடுமையாக நடாத்தத் தாம் தீர்மானித்து விட்டனர் என்றும் இற்றலியர் கூறுகின்றனர்.

### மிஸ்ரர் ஈடன் நியமனம்.

சேர் சாமுயல்ஹோரின் இடத்திற்கு இதுகாறும் சர்வதேச சங்கத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியாயிருந்துவந்த மிஸ்ரர் அந்தோனி ஈடன் என்பவர் பிரிட்டிஷ் மந்திரிசபையால் நியமிக்கப்பட்டு விட்டார்.

### செருப்படி.

பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாக மிஸ்ரர் ஈடன் நியமிக்கப்பட்டமை, இற்றலியில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. இந்த நியமனம் இற்றலியின் முகத்திற் செருப்பால் அடித்த மாதிரி யிருக்கிறது என்றும், மிஸ்ரர் ஈடன் என்ன செய்தாலும் அது சந்தேகத்துடனேயே கவனிக்கப்படும் என்றும் இற்றலிய அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

### பாராட்டு.

மிஸ்ரர் ஈடன் நியமன விஷயத்தில் இற்றலியர் இவ்வித அபிப்பிராயம் கொள்கையில் பிரிட்டிஷாரும் உலகினரும் அதனை மிகவும் பாராட்டுகின்றனர். இற்றலிக்கு விரோதமாக எண்ணெய் நிர்ப்பந்தத்தைச் சர்வதேசசங்கம் அமுலுக்குக் கொண்டுவருமாறு மிஸ்ரர் ஈடன் தம்மாலான முயற்சியைச் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரபலஸ்தர்க்குக் கடிதம்.

(வாஸவன் வரைவது)

நியாயவாதியும், வருகிற அரசாங்கசபைப் பொதுத்தேர்தலில், இம்முறையாவது ஓர் பிரதிநிதியாய்த் தெரிவு செய்யப்படல் வேண்டும் எனத் திருக்கோணமலைப் பகுதியில் உலவி வருபவருமான மிஸ்டர்,

E. R. தம்பிமுத்து

அவர்களுக்கு:—

ஐயா,

சேமம்; தாங்களும் சேமமாய் இருக்கவேண்டும் என்பதே எனது அவாவாயினும், சமீப காலத்தில் நிகழவிருக்கும் தேர்தலில் தாங்கள் அநுபவிக்க விருக்கும் கஷ்ட நஷ்டங்களையிட்டு உண்மையில் அநுதாபப்படுகின்றேன். எவ்வித கஷ்ட நஷ்ட முமின்றி இம்முறையாவது அரசாங்கசபை மண்டபத்திற்குள் ஓர் பிரதிநிதியென்ற நியதியில் நுழைந்து விடவேண்டும் என்று தாங்கள் காணும் கனவு நனவாய் விடவேண்டும் என்பதே அடியேனது அவாவாயினும், ஸ்ரீமான் பொதுஜனம் அவர்கள் அவ்வவாவினைப் பூர்த்தி செய்து வைப்பரோ என்பது உண்மையில் ஆசங்கைக்கு இடமாயிருக்கின்றது என்பதனை வருத்தத்துடன் ஏற்கெனவே தெரிவிக்க விரும்புகின்றேன். இப்படியான ஆசங்கை தோற்றுவதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை என்பதைத் தங்கள் மனச்சாட்சியே கூறுநிற்கும். உண்மையைக் கூறுங்கால், அரசியல் விஷயமாகத் தங்களுக்கு ஸ்திரமான கொள்கைகள் இல்லையென்றும், பச்சோந்திபோல அடிக்கடி தங்கள் அபிப்பிராயத்தைத் தங்கள் வசதிப்படி மாற்றிக் கொள்ளும் இயல்பினர் என்றும் பொது ஜனங்கள் பேசிக் கொள்ளுவதைத் தாங்களே தங்கள் காது புளிக்கக் கேட்டிருப்பீர்கள். இற்றைக்குப் பல ஆண்டுகளின் முன், டொனோமூர்த்திட்டம் விவாதிக்கப்படும்போது, தாங்கள் சட்ட நிருபணசபையில் ஓர் குட்டிக் கரணம் இட்டீர்கள் என்பதையும், அதன் பயனாகவே இந்த நாசமான டொனோமூர்த் திட்டம் சட்டபூர்வமாக்கப் பட்ட தென்பதனையும், எனவே தற்போது பொதுவாக இலங்கையரும் விசேஷமாகச் சிறுபான்மையினரும் அடைந்துவரும் கஷ்ட நஷ்டங்களுக்குத் தாங்களே ஜவாப்தாரி என்பதனையும் தாங்கள் வெகு சீக்கிரத்தில் மறந்துவிட மாட்டீர்கள். தாங்கள் ஒரு சமையம் மறந்து போனாலும், தாங்கள் இப்போது யாருடைய வாக்குச் சம்மதத்தைக் கோரி நிற்கின்றீர்களோ, அவர்கள் மறந்துவிடமாட்டார்கள் என்பதனைச் சென்ற பொதுத் தேர்தலிலாவது தாங்கள் அறிந்திருக்க வேண்டும். ஆனால், பட்டறி கெட்டறி பத்தைந்தி முத்தறி என்றதன் உண்மையையும் தாங்கள் உணராது இம்முறையும் வீண்கஷ்டநஷ்டங்களுக்குஆளாகப் போகின்றீர்களே என்பதையிட்டு நான் உண்மையில் மனங்கவல்கின்றேன். ஆனால்என்செயலாம்; நானும் தனியன்: தாங்களும் தனியர்; ஸ்ரீமான் பொதுஜனம் அவர்களின் அபிப்பிராயம் எப்படியோ? எது எப்படியிருந்த போதிலும் ஸ்ரீமான்கள் காசுப்பிள்ளை, சாராயநாதன், சொல்விளம்பியப்பன் என்பவர்களின் உதவியைத் தாங்கள் நாடவேண்டு மென்பதைத் தங்களுக்கு சற்றிச் சமர்ப்பித்து இத்துடன் இதனை முடிக்கும்,

தங்களன்பன்,

"வாஸவன்"

---

மன்னார் முல்லைத்தீவுப் பகுதிக்கு அடுத்து வரும் அரசாங்கசபைப் பொதுத் தேர்தலில் அபேட்சகராய் நிற்பவரான டக்டர்,

C சிவசிதம்பரம்

அவர்களுக்கு:—

அன்புமிக்க ஐயா,

ஒருவர் ஜனசமூக சேவையும், அதன் மூலமாகத் தேச சேவையும் செய்யவேண்டுமானல், கிராமச் சங்கத்திற்குள், அல்லது நகரசங்கத்திற்குள், அல்லது அரசாங்க சபைக்குள் மாத்திரம் நுழைந்து தான் செய்ய முடியும் என்ற நியதியில்லை. எப் பதவியில் இருந்தாலும், எவ்விடத்தில் கர்மம் ஆற்றினாலும் மருக்குல நன்மையை அகத்துட் கொண்டவர்கள் உண்மைத்தொண்டாற்றலாம் என்பதனைக் கேவலம் அடிமை உத்தியோகம் எனப்படும் அரசாங்க பதவியில் பல ஆண்டு காலமாக இருந்து, ருசுப்படுத்தியிருக்கிறீர்கள். இதனை எவரும் மறுக்கமாட்டார். உயிர் போகும் வரை நோயாளிக்கு ஆறுதல்கூறி அவன் பாராமரிப்புக் காரரிடம் இருந்து பணம் பறிக்கும் வைத்தியர் மிகுந்துள்ள இக்காலத்தில், தங்கள்போல்வார் இலை மறை காய் போல இருப்பது எமது நாட்டின் நற்றவப் பயனேயன்றி வேறென்ன? நிற்க,

தாங்கள் அடுத்துவரும் அரசாங்கசபைத் தேர்தலில் மன்னார் முல்லைத்தீவுப்பகுதிக்கு ஓர் அபேட்சகரா யிருக்கின்றீர்கள் என்பதறிந்து உண்மையில் ஆநந்தமுறுகின்றேன். தங்களுக்கு எதிரிடையாய் நிற்கும் ஸ்ரீமான் R. ஸ்ரீபத்மநாதன் அவர்கள் உண்மையில் ஓர் அரசியல் நிபுணர்தான். பொருளாதார ஞானிதான்: ஆனால், அவர் இதுகாறும், தாம் யாரின் பிரதிநிதியாக வர இப்போது அபேட்சிக்கின்றாரோ, அவர்களின் க்ஷேமலாபத்திற் போதிய கவலை எடுக்கவில்லை என்பதனையும், தங்களுக்கு இருக்கும் உள்ளூர் அநுபவம், தேர்ந்தனுப்பும் தொகுதியினர்க்கு இன்ன இன்ன தேவை என்பதைப் பற்றிய அறிவு என்பன தங்கள் அளவு அவர்க்கு இல்லை என்பதனையும் உத்தப் பகுதி வாக்காளர் ஒத்துக் கொள்வர் என்பதே எனது திடமான நம்பிக்கை.

ஈற்றில் யான் தங்களுக்குக் கூறக்கூடியது இதுவே: ஓர் ஊரின், கிராமத்தின் பொதுஜன நன்மையில் ஒரு வித கவலையும் எடுக்காது அரசாங்கசபைத் தேர்தற் காலம் வந்தவுடன், இலுப்பைப்பழக்காலத்தில் வரும் வெளவால்களைப் போல வந்து, பின் அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோலக் கிளம்பிக் கம்பி காட்டும் மேதாவிகளுக்குத் தங்கள் போல்வார் ஓர் படிப்பனை அளிக்கவேண்டியது நியாயமே.

இங்ஙனம்,

தங்களன்பன்,

"வாஸவன்"

---

## அடுத்த காங்கிரஸ் தேர்தல்.

ஜனவரி 7-ம் தேதிவரை தவணை.

இந்திய காங்கிரஸ் மகாசபையின் பொதுக் காரியதரிசி விடுத்திருக்கும் அறிக்கையாவது:—

பொன் விழாக் கொண்டாட்ட விஷயமாக காங்கிரஸ் ஊழியர்களின் கவனம் செலுத்தப்பட்டிருப்பதால் அடுத்த காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தேதியும் மாற்றப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதம் 14-ம் தேதிக்குப் பதிலாக 1936 - ம் வருடம் ஜனவரி 7 - ம் தேதி யன்று பிரதிநிதிகள்தேர்தல் நடை பெறும். மாகாணங்களில் இருந்து பிரதிநிதிகள் இடாப்பு ஜனவரிமாதம் 18 - தேதிக்கு முன்னரோ அல்லது அன்றோ அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபைக்கு வந்து சேரலாம்.

தலைவரைத் தேர்ந் தெடுப்பதற்காகக் கூடும் பிரதிநிதிகள் கூட்டம் ஜனவரி 17-ம் திகதிக்குப் பதில் 25-ம் திகதி நடைபெறலாம், மாகாணத் தேர்தல் முடிவு அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபைக்கு ஜனவரி மாதம் 30-ம் திகதி வந்து சேர வேண்டும். முன் குறிப்பிட்ட படியே ஜனவரி மாதம் 31-ம் தேதி தலைவர் பெயர் அறிவிக்கப் பட்டுவிடும்.

## இலங்கையிற் சீமேந்து செய்தல்

ஆராய்ச்சியின் முடிவு.

இலங்கையிற் சீமேந்தை ஆக்குவதற்கான ஆராய்ச்சிகளெல்லாம் ஏறக்குறையச் செய்யப்பட்டு முடிவாகின்றன. இம்முயற்சியில் விசாரணைக் கர்த்தாராக நியமிக்கப் பெற்றுள்ள மிஸ்டர் A H நதானியல்ஸ் என்பவர் புத்தளம் அநுராசபுரம் திருக்கோணமலை என்னுமிடங்களில் நத்தகசப் பகுதியிலுள்ள என்ஜினியர்பாரின் உதவியைக் கொண்டு சீமேந்து செய்தற்கான பொருள்கள் ஆங்காங்கு உண்டோ எனப் பரிசீலனை செய்து பார்த்தனர். பலப்பிட்டியாவிலும் சிமேந்திற்காகிய இயற்கைப் பொருள்களுண்டென்றமையினால் ஆங்கும் சென்று சோதனை செய்ய உத்தேசித்திருக்கின்றனர். அந்த இடங்களைத் தவிர மிகிந்தலைக் காட்டில் வெளியேயாவின் ஓரத்திலுள்ள நிலத்திலும் சிமெந்திற்காகிய பொருள்கள் உண்டென்று அறிந்து அங்குள்ள சுண்ணாம்புக் கற்களைச் சோதித்துப் பார்த்தபோது அவை சிமேந்திற்கு ஆகியதென்று கண்டுள்ளனர். சிமேந்து செய்தற்கான பொருள்கள் இலங்கையின் பலபாகங்களிற் காணப்படுகின்றனவாம். ஆனால் இந்தப்பொருள்களை எடுத்துக் கொழும்புக்குக் கொண்டுபோய்ச் சிமேந்து செய்வதற்கான புகைவண்டி முதலிய வசதிகளுண்டோ என்பதையிட்டுத் தான் இப்பொழுது யோசிக்கின்றனர். கொழும்பில் இல்லையேற் கொழும்பிற்குச் சமீபமாக இப்பொருள்கள் கொண்ட ஒரு சுரங்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதே இந்த விசாரணைக் கர்த்தாதம் அதிகாரிகளினதும் நோக்கமாகும். கொழும்பில் அப்படியில்லாவிட்டால் யாழ்ப்பாணத்தில்—அதாவது காங்கேசன்துறையிலிருந்து பொருள்களைப் பெறலாகுமென்பது மிஸ்டர் நதானியல்ஸ் கொண்ட நோக்கமாகும். தைமாசம் முடிவதற்கிடையில் இதனைப்பற்றிய விசாரணை முடிவெய்த அடுத்த மார்ஜ் மாசம் அறிக்கைப்பத்திரமும் வெளியாகுமாம்.

---

## பட்டக்களப்பில் மழை.

மட்டக்களப்பு முழுவதும் கனத்த மழை பெய்து கொண்டிருப்பதால் போக்குவரத்துகள் சீர்குலைந்து விட்டிருக்கின்றன.

தெற்குக் கரையிலுள்ள ஓண்டச்சி மடத்திலிருக்கும்பாலம் கடக்க முடியாதபடி பிரவாகத்திலாழ்ந்திருக்கிறது. ஆகையால் அந்தப் பக்கங்களுக்குச் செல்லவேண்டிய தபால்கள் தாமதிக்கப்படுகின்றன

வடக்குக் கரையில் பட்டக்களப்பிற்கும் திருக்கோணமலைக்குமிடையிலுள்ள ரோட்டின் 18-வது மைலிலிருக்கும் பாலத்திலும் பிரவாகம் அதிகமாக இருக்கின்றது. இதன் காரணமாக தபாலாபீஸ் அதிகாரிகள் தபால்களை மோட்டாரின் மூலமாக அனுப்ப முடியாமல் புகையிரதத்தில் அனுப்பினார்கள்.

கதிரவேலிக்கு அப்பாலுள்ள இடங்களில் மோட்டார் போக்குவரத்துகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. திருக்கோணமலை தபால்களுக்குத் தான் தாமதம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

சென்ற இரண்டு நாட்களாக மழையில்லை. சிதோஷ்ண நிலைமை இதே போன்றிருந்தால் இன்னும் சில தினங்களுக்குள் பிரவாகம் தணிந்துவிடும். இந்த வெள்ளத்தினால உயிர்ச்சேதமோ அல்லது பொருட்சேதமோ ஏற்படவில்லை.

இப்பொழுது வானத்தின் நிலைமையக் கவனித்தால் மறுபடியும் கனத்தமழை பொழியும்போல்தோற்றுகின்றது.

# தென் இலங்கையில் தேர்தல்.

## கொழும்பில் பலத்த எதியிடை குணசிங்கிக்குத் தோல்வி வருமா?

## ஜெயத்திலகாக் கோஷ்டிக்கு இம்முறையும் வெற்றி?

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்]

கொழும்பு: 23-12-35-

சென்ற பிரகாரத்தில், தென் இலங்கையில், முந்திய அரசாங்கசபைப் பொதுத் தேர்தலின்போது கட்சிப் பிரிவினைகள் இருந்தனவென்றும், அரசாங்க சபை அமைக்கப்பட்டபின், மந்திரிமார் என நிருப்பவர்கள், தங்கள் கட்சிக்கொள்கைகளை மறந்து, தமது லட்சியங்களைத் துறந்து, யதேச்சாதிகாரமாகக் கர்மம் ஆற்றி, ஈற்றில் தாம் எக்கட்சியின் உதவியால் உந்நதபதவிக்கு வந்தனரோ அக்கட்சிக்குச் சாவுமணி அடித்தனர் என்றும் ஒருவாறு விளக்கினேன். இனி, தென் இலங்கையில் தேர்தல் நிலைமை எப்படியிருக்கிறது என்பதைச் சற்று ஆராய்வாம்.

### கொழும்பு வடக்கு.

கொழும்பு வடக்குத் தொகுதிக்கு இதுகாறும் ஸ்ரீமதி நேசம் சாவணமுத்துவே பிரதிநிதியாக ஸ்தானம் வகித்துவந்தார். இம்முறை அவர்க்கு எதிரிடையாக டக்டர் S. C. போல், மிஸ்டர் J. R. றெட்றிக்கோ மிஸ்டர் C. H. E. பர்ணந்து, டக்டர் H M பீரிஸ் என்பவர்கள் நிற்பர் எனத் தெரிகிறது. இத் தொகுதியிற் சாவணமுத்து குடும்பத்திற்குச் செல்வாக்கு அதிகம். சென்றமுறை நிகழ்ந்த பொதுத்தேர்தலில் டக்டர் R. சாவணமுத்து தெரிந்தெடுக்கப் பட்டார். ஆனால் சுப்பிறீம் கோட்டார், அவர் தெரிவை நிராகரிக்கவே, அவர் மனைவி ஸ்ரீமதி நேசம் சாவணமுத்து தெரிந்தெடுக்கப்பட்டார். இதன்பின்னும் சுப்பிறீம்கோட்டார் இத்தேர்தலை நிராகரித்தனர். இதன்பின்னும் வாக்காளர் ஸ்ரீமதி நேசத்தைப் பெரும்பான்மையான வாக்குச்சம்மதங்களினால் தெரிந்தனுப்பியமை, அவர் குடும்பத்தின் செல்வாக்கைக் காட்டாநிற்கின்றது. எனவே, இம்முறையும் அவர் தோற்கடிக்கப்படுவரோ என்பது மிகமிகச் சந்தேகமே.

### கொழும்பு மத்தியபகுதி.

சென்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மிஸ்டர் A. E. குணசிங்கி, மிஸ்டர் T. B. ஜயா, மிஸ்டர் P. ஜீவேந்திரசிங்கி என்பவர்களே இம்முறையும் போட்டியிடுவர். மிஸ்டர் ஜீவேந்திரசிங்கி வெற்றி பெறுதல் அசாத்தியம் என நிச்சயமாய்க் கூறலாம். எனவே, தேர்தற்போர் மிஸ்டர் குணசிங்கி, மிஸ்டர் ஜயா என்பவர்களுக்கிடையேதான் மும்முரமாக நடக்கும். ஆனால், மிஸ்டர் குணசிங்கி தொழிலாளர்க்கிடையே தம் செல்வாக்கை அதிகம் இழந்துவிட்டா ஆனமையால், அவர் இம்முறையும் வெற்றிபெறுவர் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது.

### கொழும்பு தெற்கு.

இத் தொகுதிக்கு டக்டர் E. A. கூரே என்பவரே இப்போது அபேட்சகராயிருக்கின்றார். இத் தொகுதிக்கு டக்டர் S C போல் சென்ற தேர்தலிற் போட்டியிட்டார். இம்முறை போட்டியிலில்லையானமையால், டக்டர் கூரேயே பிரதிநிதியாய் இருப்பர். ஆனால் பிரபல நியாயவாதியான மிஸ்டர் R L பெர்ராவை இத் தொகுதிக்கு அபேட்சகராய்வரும்படி பலர் கேட்கின்றனர் எனினும் மிஸ்டர் பெர்ரா இணங்குவரோ என்பது சந்தேகமே.

### ஜெயத்திலகா—சேனநாயக்கா.

கழனிப்பகுதிக்கு சேர் D B ஜெயத்திலகாவும், மினுவாங்கொடைப் பகுதிக்கு மிஸ்டர் D S சேனநாயக்காவும் இப்போது பிரதிநிதிகள் ஆவர். இவர்களுக்குப் போட்டி இம்முறையும் இல்லை. போட்டியிருந்தாலும் அவர்கள் சுலபமாக வெற்றிபெறுவார்கள் என்று தடையின்றிக் கூறலாம்.

### மற்றும் இடங்கள்.

கொழும்பை ஒழிந்த ஏனைய இடங்கள் சம்பந்தமான தேர்தல் விபரம் தமிழ்மக்களுக்கு அவ்வளவு நன்மை பயக்காது. எனினும், வித்தியாமந்திரி மிஸ்டர் கன்னங்கரா, வெற்றி யுறுதல் துர்லபமாகும். தொப்பி தோட்டத்தில், கைத்தொழில் வர்த்தகப்பகுதி மந்திரியான ஸ்ரீ பேரிசுந்தரத்திற்கெதிராக கண்டி பிரபல நியாயவாதியின் பாரியாரான ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் அபேட்சகராக நிற்பர்.

### மிஸ்டர் E. W. பெரீரா.

பழையவர்களான அங்கத்தவர்களில் ஹொறுப் பிரதிநிதியாயிருந்த மிஸ்டர் E W பெர்ரா இம்முறையும் நிச்சயமாய் வெற்றிபெறுவர். அநுராசபுரப் பகுதிக்கு மிஸ்டர் H R பிறீமனுக்கு எதிராக இன்னுருவரும் கிளம்பவில்லை.

### மக்கான் மரக்காயர் நிலை.

போக்குவரத்துப்பகுதி மந்திரியான மிஸ்டர் மக்கான்மாக்காயர் எங்கே அபேட்சகராய் நிற்கலாம் என்று இன்னும் யோசிக்கின்றார். கொழும்பு வடபகுதி, புத்தளம், மட்டக்களப்பு என்னும் 3 இடங்களிலும் மிஸ்டர் மாக்காயரின் கண்ணோட்டம் செல்கின்றது. நியமனம் வரைக்கும் அவரின் தொகுதி எது என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது போலிருக்கிறது.

### மட்டக்களப்பு.

கீழ்மாகாணத்திற்கு இரு ஸ்தானங்கள் உள. திருக்கோணமலை மட்டக்களப்புத் தொகுதிக்கு இப்போது பிரதிநிதியாய் இருப்பவர் ஸ்ரீ M. M. சுப்பிரமணியம் அவர் இனி மிஸ்டர் E. R. தம்பிமுத்து, இளைப்பாறியுள்ள நீதிபதி திரு M. சின்னையா, ஸ்ரீ K. கனகசபை என்பவர்கள் அபேட்சகராகப் போட்டியிடுவர். இப்போதைய நிலைமையில் ஸ்ரீ சுப்பிரமணியமே வெற்றியுறுவர் என்று சொல்லப்படுகிறது.

### மட்டக்களப்பு - தெற்கு.

இந்தொகுதியின் தற்போதைய பிரதிநிதி மிஸ்டர் மக்கான் மரைக்காயர் மேலே யான் குறிப்பிட்டபடி, இம்முறையும் மிஸ்டர் மாக்காயர் இத்தொகுதி அபேட்சகராய் நிற்பரோ என்பது சந்தேகம். எது எப்படியிருந்தபோதிலும், மிஸ்டர் M. A. L. காரியப்பர், மிஸ்டர் K. M. அப்துல் மஜீத், ஸ்ரீ S. O. கனகரத்தினம் என்பவர்கள் இத்தொகுதிக்குப் போட்டியிடுவர். முன்னையவர் இருவரும் முஸ்லிம்கள். முஸ்லிம்களின் வாக்குச் சம்மதங்கள், இவ்விரு முஸ்லிம் அபேட்சகர்களாலும் பிரிக்கப்பட்டு விட, மிஸ்டர் கனகரத்தினம் வெற்றி பெறுதலும் கூடும்.

---

## மனைவிக்கு ஜீவனும்சம்.

நிச்சிங்கர் சின்னத்தம்பி பெண் இராசம்மா வென்னும் அல்வாய் வடக்கில் வசிக்கும் பெண், தனது கணவனான சின்னத்தம்பி இப்போது சிலமாதகாலமாகத் தன்னை விட்டுப் பிரிந்து அல்வாய் மேற்கில் வசிக்கும் தெய்வானைப்பிள்ளை என்னும் பெண்ணுடன் வசித்து வருவதால், தனக்கும் தனது 2 குழந்தைகளுக்கும் ஜீவியச் செலவு தரவேண்டும் என்று பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் தொடர்ந்த வழக்கில் எதிரி மாதத்தோறும் 12½ ரூபா கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

---

## காங்கிரஸ் வெற்றி.

தென் இந்தியா திருநெல்வேலி நகரசபையின் பிரத்யேகக் கூட்டம் சென்ற 20-ம் காலை 9-15 மணிக்கு ஜில்லா கலெக்டர் மிஸ்டர் டி. டி. வாரனின் அக்ராசனத்தின் கீழ் நடந்தது. அப்பொழுது சபைத் தலைவர் தேர்தல் நடந்தது. அப்பதவிக்கு காங்கிரஸ் சார்பாக ஸ்ரீமான் எம் டி. டி. குமாரசாமி முதலியார் நின்றார். இவருக்கு எதிராக ஸ்ரீமான் ஐ. வி. ஈஸ்வரன் பிள்ளை எம். எல். ஸி. போட்டியிட்டார்.

ஸ்ரீமான் எம். டி. டி. குமாரசாமி முதலியார் 26 சம்மதங்கள் பெற்று தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஸ்ரீமான் ஈஸ்வரன் பிள்ளைக்கு 23 சம்மதங்கள் கிடைத்தன. மொத்தம் 51 அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கலெக்டர் ஸ்ரீமான் குமாரசாமி முதலியாரைப் பாராட்டினர். [illegible] ஜனங்கள் வெளியே கூடி ஆரவாரம் செய்தனர்.

# சுருட்டுத் தொழில்— அதன் நிலைமை.

## தொழிலாளர்க்கிடையே வேலையின்மை வேலைசெய்வோரும் திண்டாட்டமே

### விசாரணைச் சபையின் அறிக்கை

யாழ்ப்பாணத்திற் சுருட்டுத் தொழிலின் நிலைமையை ஆராயவும், அதனை உன்நத நிலைக்குக் கொண்டு வருதற்கான சிபாரிசுகளைச் செய்யவும், 1935 - ம் ஆண்டு ஜூலை மாதம் 15 - ம் தேதி யாழ்ப்பாணச் சங்கம் ஒரு உபகிர்வாகசபையை நியமித்தது; அந்தச் சபையினர், இப்போது இது சம்பந்தமாக ஓர் அரிய அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர் அதன் சாரம் வருமாறு:—

(முற்றொடர்)

#### வர்த்தக அடையாளம்

இந்த முறைப்படிக்கு, ஒவ்வோர் சுருட்டுத் தொழிற்சாலையிலும் ஆக்கப்படும் சுருட்டுக்களுக்கு பதிவு செய்யப்பட்ட வர்த்தக அடையாளம் இருத்தல் வேண்டும் என அரசினர் கண்டிப்பான உத்தரவிடல் வேண்டும். இப்படி வர்த்தக அடையாளம் வைத்திருக்கும் தொழிற்சாலைகளே சுருட்டு ஆக்கலாம் என்ற விதி இருத்தல் வேண்டும். இன்னும், ஓர் தொழிற்சாலை பதிவு செய்யப்படவேண்டுமானால், அங்கே குறைந்த பட்சம் 10 பேராவது வேலை செய்ய வேண்டும், தற்போதைய வேதன விகிதத்தைக் குறைக்கவொண்ணாது, சுகாதாரத்திற்கமைந்ததாகத் தொழிற்சாலை இருக்கவேண்டும், இனி அரசினரால் நிறுவப்படவிருக்கும் கைத்தொழிற்பகுதிப் பரிசோதகர் ஒருவர் பரிசோதனை செய்யுங்காலத்தில் அவர்க்குத் திருப்தி பளிக்கக் கூடிய நிலையில் அது இருத்தல் வேண்டும் என விதிகள் இயற்றப் படுதல் வேண்டும்.

வர்த்தக அடையாளங்கள் (Trade Marks) இருக்கவேண்டும் என்ற விதி கட்டாயம் இருந்தால், முதலாளிமாரின் தங்களுடைய தினிசுகளுக்குத் தக்கபடி சுருட்டுக்களை ஆக்கமுடியும். இளக்கச் சுருட்டுக்கள் விற்கப்படமாட்டா.

#### மாற்றம் செய்யவேண்டும்.

இன்னும், சுருட்டு ஆக்குவது, பழைய முறையைத் தழுவியே செய்யப்படுகிறது. ஆனால் சுருட்டுப் புகைப்பவர், எத்தகைய சுருட்டுக்களை விரும்புகின்றனர் என்பதை முதலாளிமார் சிந்தியாதிருப்பது உண்மையில் வருந்தத்தக்க விஷயம். ஸாமான புகையிலையைக் கொண்டு ஆக்கி அதிகம் கோடா தெளிக்கப்பட்டிருக்கும் சுருட்டை அபிமானிப்பார் இப்போது அநேகர் இல்லை. இந்த விதமான சுருட்டுக்களே ஆக்கப்படுகின்றன. எனவே, மிகத் திறம சுருட்டிலும் பார்க்க, இளக்கமான சிகறறே, புகைப்பவர்களால் அபிமானிக்கப்படுவது நூதனம் அல்ல. சுருட்டை ஆக்கும் முறையில் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும் பழைய முறையைத் திருத்துதல் வேண்டும்.

#### புகையிலை:

இனி சுருட்டுக்கு உபயோகிக்கப்படும் புகையிலையிலும் பல மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். நாம் கோரும் புதிய சுருட்டுக்களுக்குத் தற்போது இங்கே விளைவிக்கப்படும் புகையிலை இயைந்ததல்லவாயிருக்கலாம். கோடாப் போடாத சுருட்டுக்களுக்கு இயைந்ததான புகையிலையை இங்கே விளைவிக்க முயற்சி செய்தல் வேண்டும்.

#### அரசினர் கடமை.

இப்படியான முயற்சியைத் தனித் தனியாளர் செய்வது கஷ்டம். இந்த முயற்சி அரசினர் விவசாயப்பகுதியினரால் செய்யப்படுதல் வேண்டும். தக்கநிபுணரின் மேற்பார்வையில், ஓர் புகையிலை ஆராய்ச்சி நிலையம் அரசினரால் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். இந்த நிலையத்தை தென்மராட்சியில் அல்லது பச்சிலைப்பள்ளியில் ஸ்தாபிக்கலாம்.

#### விளம்பரம்.

இனி, பழையமுறைப்படி சுருட்டுக்களைக் கட்டி விற்பது தவிர்க்கப்படல வேண்டும் என்பதே எமது ஆராய்ச்சியின் முடிவாகும். அழகான வர்ணக்கடுதாசிகளிற் கட்டி, அழகான பெட்டிகளில் சுருட்டுக்களை அடுக்க வேண்டும். நவீன முறைப்படி சுருட்டுக்களைப் பத்திரிகைகள், துண்டுப்பத்திரங்கள் மூலமாக விளம்பரப்படுத்தல் வேண்டும்.

#### பாதுகாப்பு.

அரசினரும் இது விஷயத்தில், போதிய ஊக்கமும் சிரத்தையும் எடுத்தல வேண்டும். இலங்கையில் இறக்குமதியாகும் பீடி, சிகாறு என்பவற்றின் மீது பாதுகாப்புவரி விதிக்க வேண்டும். அதுவுமன்றி, இறக்குமதி செய்யப்படும் பொருள்களைக் கொண்டு ஆக்கப்படும் பீடிகள், சிகரறுக்கள் மீதும் ஓர் வரி விதிக்க வேண்டும் என அரசாங்கசபைக்கு நாம் சிபாரிசு செய்கிறோம். இனி மலாய்நாட்டில் இறக்குமதியாகும் எமது சுருட்டுக்களுக்கு அங்கே இறக்குமதித்தீர்வை அதிகம். இத்தீர்வையைக் குறைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு இலங்கையரசினர் முயற்சிசெய்தல் வேண்டும். இப்போதுள்ள அபரிமிதமான இறக்குமதி வரியினால், மலாய் நாட்டில் வதியும் யாழ்ப்பாணத்தவர் தம் நாட்டுச் சுருட்டுக்களை உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. இனி, இலங்கையிலும், சுருட்டுக்களுக்கான புகையிலைச் செலவு குறைக்கப்படல் வேண்டும். இச்சுருட்டுத் தொழில் யாழ்ப்பாணத்தவர்க்கு மாத்திரமல்ல முழு இலங்கைக்கும் நன்மை பயப்பதாயிருக்கிறது. இத்தகைய தொழில் அழிந்து ஒழிந்து போகாதபடி அரசினர் உதவி புரிதல் இன்றியமையாததாகும்.

---

#### சர்வதேச, மத காங்கிரஸ்

இரண்டாவது சர்வதேச மதகாங்கிரஸ் பிரிட்டிஷ் தேசிய அங்கிராசனர் சர் பிரான்சிஸ்யங் ஹஸ்பெண்ட் தலைமையில் அடுத்த ஜூலை மாதம் 3-ம் தேதி முதல் 18-ம் தேதிவரை லண்டனில் நடைபெறும் அம் மகாநாட்டிற்கு ஹிந்து மதத்தின் பிரதிநிதியாக வரும்படி கல்கத்தா சமஸ்கிருத கலாசாலை பிரின்ஸ்பால் டாக்டர் தாஸ் குப்தாவை அழைத்திருக்கிறார்கள். அவர் அடுத்த ஏப்ரலில் புறப்பட்டுப் போவாரென்று தெரிகிறது.

## உலகம் பலவிதம்.

"எனக்கு உத்தியோக மில்லாமையே, தக்க இடங்களில் நல்ல சீதனத்துடன் விவாகஞ் செய்தற்குத் தடையாயிருக்கின்றது என்பதை உணர்ந்த பிறகு எப்படியேனும் ஏதும் உத்தியோகம் பெற வேண்டுமென்ற சிந்தனை எனமனத்திற் குடிகொண்டது. உத்தியோக விஷயமாக "தேவை" யென்ற விளம்பரங்களைத் தினசரிப் பத்திரிகைகளில் தவறாமற் பார்க்கத் தொடங்கினேன்: அப் பத்திரிகைகளில் "உபாத்தியாயர்" தேவையென்னும் நிறமைவாய்ந்த 'கிளார்க்மார்' தேவையென்றும் இப்படியாகப் பல தேவை விளம்பரங்கள் இடையிடையே காணப்பட்டன. அப்படியாக உத்தியோகங்களுக்கு விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் இன்னின்ன பரீட்சைகளிற் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்றும் அவ்விளம்பரங்களிற் குறிப்பிடப் பட்டிருந்தன. ஆனால் நான் அப்படிப்பட்ட பரீட்சை யொன்றிலேனும் சித்தியடையவில்லையே. இதற் கென்ன செய்யலாமென்று யோசித்தேன்; ஐயோ! அந்த நாட்களில் சிரமப்பட்டுப் படித்தேனில்லையே எனறு பச்சாத்தாப மடைந்தேன்; போனதையிட்டு யோசித்துக் கவலைப் பட்டு ஆவதென்ன?

* * *

இவ்வாறு நான் மனவருத்தப் பட்டுக்கொண்டு திரியும்போது, என்னுடன் ஒருங்கு முந்திப் படித்த கூட்டாளி ஒருவர் தேயிலைத் தோட்டத்திலே கிளார்க்காகக் கடமை பார்ப்பவர்; நத்தார் விடுதலையின் பொருட்டு ஊரில் வந்து நின்றவர்; ஒரு நாட் பின்னேரம் என்னைத் தெருவிற் சந்தித்தார்; "மிஸ்டர், எப்படிச் சுகம்? நீர் இப்பொழுது என்ன செய்கிறீர் என்று கேட்ட போது, நான் என் விருத்தாந்தங்களையும் அந்த நேரத்தில் என் மனத்திற் கொண்டிருந்த கவலையையும் அவருக்குச் சொன்னேன, அதற்கவர் "சோதனை பாஸ்பண்ணி விட்டு உங்கே எத்தனைபேர் சும்மா இருக்கிறார்கள்; இந்த காலையிற் சோதனை 'பாஸ்' பண்ணுவதைக் காட்டிலும் கொஞ்சப் பணம் கைவசமிருந்தால் அதனால் நன்மையுண்டு; பணமில்லாதவன் பிணம்; படிப்பில் ஒன்றுமில்லை" என்றார். அவர் சொன்ன சமாதானம் எனக்குச் சந்தோஷமாயிருந்தது, ஏனென்றால் எனது கொள்கையும் அப்படியேயாகும். "அதுசரி பணத்தை வைத்துக் கொண்டு உத்தியோகத்தை என்ன விலைக்கு வாங்குவதா' என்று நான் அவரைக் கேட்க, அவர் "ஓம் அப்படித்தான்; நீ போய் இன்னிவனுரைக் காண்; அவர்களுக்கு ஏதும் தருவதாகச் சொல்லு; அவர்கள் உத்தியோகம் எது விதத்திலும் உனக்குத் தேடித் தருவார்கள்" என்று மூன்று நாலு பேருடைய குறிப்பையும் எனக்குச் சொல்லிவிட்டுப் போயினர்.

* * *

நான் மெத்தவும் சந்தோஷப்பட்டுக் கொண்டு வீட்டிற்குப் போய் என் தகப்பனாரிடஞ் சொன்னேன்; அவர் "சரி, அந்தக்கருமம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்றார். சில நாட்கள் செல்ல, தகப்பனார் எனது கூட்டாளி சொன்ன நாமாவலியில் ஒருவரைப் போய்க் கண்டார்; அவர் தாம் தம்மால் இயன்ற உதவி செய்வதாகவும் ஆனால் தமக்கு அதையிட்டு ஒரு சதமேனும் தர வேண்டாம் என்றும் என தகப்பனாருக்குத் தெரிவித் திருந்தார். இரண்டு மூன்று மாசம் சென்றும் அவரால் ஏதும் உத்தியோகம் தேடித்தரமுடியவில்லை யென்பதைக் கண்டு என் தகப்பனார் இன்னொருவரைப் போய்க்கண்டு கருமத்தைச்சொல்லி காரியம். வாய்க்குமானால் ரூபா 100 தருவேன என்று அவருக்கு உறுதிப்படுத்திச்சொன்னார். அதற்கு அவர் ரூபா 50 முந்தியேதரவேண்டுமென்றும உத்தியோகந் தேடிக் கொடுத்தபின் எஞ்சிய 50 ரூபா தரலாமென்றும தகப்பனாருக்குச் சொல்ல, தகப்பனாரும அதற்கு உடன்பட்டு எவ்வளவோ சங்கடப் பட்டு 50 ரூபாஎடுத்து அவர்கையிற் கொடுத்தார். பணம் கொடுத்துப் பத்து மாசமாகியும் அவர் ஏதும் உத்தியோகம் தேடித் தருவதற்கு முயற்சி செய்யவில்லை; நானும் தகப்பனாரும் இடையிடையே போய்ப் பலமுறை கண்டபோதெல்லாம் அவர் இந்த மாசம் அடுத்தமாசம் என்று தவணை சொல்லிக்கொண்டு வந்தார்; தகப்பனார் ரூபா ஐம்பதும் தொலைந்ததென்று நிச்சயப் படுத்திக் கொண்டார்; ஆனால், "எப்படியோ மற்றை 50 ரூபாவுக்குமாக ஒரு உத்தியோகத்தை அவர் தேடித் தருவார் தானேயென்று நம்பியிருந்தேன்; முந்திய 50 ரூபாவும் அவருக்கு மிச்சந்தானே என்ற எண்ணம் எனக்கு அப்பொழுது புலப்படவில்லை.

—வரும்.

* * *

"உலகம்பலவிதம்" என்றாற்போல இங்குள்ள பஞ்சாங்கங்களும் பலவிதமா! வாக்கியபஞ்சாங்க கணிதர்கள், சென்ற வருஷத்திற்கு "பவ" வருடமென்று பெயரிட்டிருப்ப, திருக்கணிதர் "பாவ" வருடமென நாமகரணஞ் செய்திருந்தார். வாக்கிய கணிதத்திற்கும் திருக்கணிதத்திற்கும் இடையிடையே இந்தவிதமாக வருடங்களின் பெயரிற் பேதமிருப்பது சகசமாக்குமென்று நினைத்திருந்தேன்; ஆனால் வருகிற வருடத்தின் பெயரில் இங்குள்ள மூன்று பஞ்சாங்க கணிதர்களும் மூன்று விதமாக நாமஞ் சூட்டியிருக்கிறார்கள்; இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் தாது வருஷமென்றும், சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தில் தாதுவ வர்ஷமென்றும், திருக்கணிதபஞ்சாங்கத்தில் தாத்ரு வருஷமென்றும் பேதமான பெயர் இடப்பட்டிருக்கின்றனவே; இதற்குக் காரணமென்ன? இந்தப் பெயர்கள் முந்தியே இப்படிச் சிறிது சிறிது பேதப்படுத்தியிடப்பட்டனவா? இல்லையேல் இக்கணிதர்கள் தாம் தாம் பேதப்படுத்துவதா? இவைகளுள் எவை சரி, எவைபிழை? எல்லாப்பெயர்களும் ஒருபொருள் குறித்த பல சொற்களா! குறித்த ஒரேவருடத்திற்கே கணிதஞ்செய்யும் மூப்பாற் கணிதர்களும் இப்படி வருஷத்தின்பெயரிலேயே மாறுபட்டாற சோதிட கணித விஷயங்களை யறியாதார் செய்வதென்ன? நாமகரணஞ் செய்யும் விஷயத்திலாயினும் இம்முக்கணிதரும் ஒற்றுமைப் படவொண்ணாதா? கடவுள் மீனுக்கு துழையன இட்டதேபெயர் என்றவிதமாகவன்றோ இதுவும் இருக்கின்றது.

## மும்மதங்களின் மாண்பு.

### ஹிந்து — இஸ்லாம் — கிறிஸ்துவம். ஹிந்துக்கள் கற்கவேண்டியது என்ன?

### ஒற்றுமை, அமைப்பு முறையே.

( ஸ்ரீஇராமக்கிருஷ்ண விஜயம்.)

சென்னையினின்றும் வெளியாகும் 'ஸ்ரீராம கிருஷ்ணவிஜயம்' என்னும் சஞ்சிகையின் சமீபத்தில் வெளியான இதழில் எழுதப்பட்டுள்ள இந்தியாவேடூவது எங்ஙனம்? என்னும் தலையங்கத்தில் மும்மதங்களின் மாண்பைப்பற்றி பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

மதங்கள் அனைத்திற்கும் உறைவிடமாவது இந்தியா. வெளிநாடுகளில் தோன்றிய இஸ்லாமிய மதமும் கிறிஸ்து மதமும் இந்நாட்டைக் கவர்ந்திருக்கின்றன. பிறமதங்களைத் தாக்கி யழித்தல் என்னும் கொள்கையில புதிதாக வந்திருக்கும் மதங்கள் பற்றுவைத்திருக்கின்றன. ஆனால் இந்தியாவின் தொன்மையான மதம் அத்தகையதன்று. செல்லுவதற்கு வந்திருக்கும் புறமதங்களைச் சாந்தமாக அணைத்துத் தன்னகத்து அடக்கிக் கொள்ள வல்லது ஹிந்துமதம். அன்னியமான எவற்றையும் அழிப்பதற்குப் பதிலாகத் தன் மயமாக்கும் இயல்புடையது அது. பெருமையுடன் வளர்கின்ற கானகத்தோடு அதை ஒப்பிடலாம். மழையும் மூடுபனியும் சூழ்ந்துயர்ந்து காட்டை மறைத்துக் கொள்கின்றன. அதனால் அடவியின் அழகு குன்றியதுபோல் காணப்படுகின்றது. ஆனால் இந்த நிலைமையில்தான் மரஞ் செடி கொடிகள் நன்கு வளர்கின்றன, மழையினின்றும் மூடுபனியினின்றும் பெறக்கூடிய பலன் அனைத்தையும் அவைகள் ஏற்றுக்கொள்கின்றன. கேடு போல் தோன்றும் கார்மேகத்தினின்றும் கடும்பனியினின்றும் ஆரண்யம் அதிக அழகையும் உயிரையும் பெறுகிறது. அவ்வாறே இஸ்லாமிய மதத்திலும் கிறிஸ்து மதத்திலும் உள்ள நன்மைகளை ஹிந்துமதம் ஏற்றுத் தன் மயமாக்கிக்கொள்ளவேண்டும்.

ஒற்றுமை இஸ்லாமாகிய மதத்தை அலங்கரிக்கிறது. கடவுள் சன்னிதானத்தில் முஸ்லிம்களுக்கிடையில் உயர்வு தாழ்வு இல்லை, வெறுப்பு வேற்றுமையில்லை, தனியுரிமையில்லை சகோதரபாவனை ஒன்றே உளது எனும் உயர் கொள்கைகளை அவர்கள் செய்கையிற் காட்டுகின்றனர். இவைகளை ஹிந்துக்கள் ஏற்றுக்கொண்டு மானுடவர்க்கம் அனைத்தையும் ஓர் குடும்பமாகப் பாராட்டுவார்களாக.

அமைப்பிற் சிறந்தது கிறிஸ்துமதம். ஓர் அதிபதியின் ஆணையின்படி நடக்கும் சேனைக்கும் ஆட்டுக் கூட்டத்துக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் கிறிஸ்தவர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையில் இப்போது இருக்கிறது. ஆயிரக் கணக்கான பேர் எனினும் அவர்கள் ஆலயங்களுக்குச் செல்லுதலிலும், உள்ளே அமர்ந்திருப்பதிலும், கடவுளை வழுத்துதலிலும், பின்பு வெளியேகுதலிலும எவ்வளவு அமைதி, எவ்வளவு நீதி பொலிகின்றன! கிறிஸ்துவர்கள் பூணும் பக்தி விசுவாசத்தைப் பற்றியன்று நாம் இங்குப் பகர்வது ஆலயங்களில் கூடுகையில் அவர்கள் கொள்ளும் அடக்கமும், நேர்த்தியுமே உள்ளத்தைக் கவர்வனவாகின்றன.

ஹிந்துவினிடத்தில் பக்தியிருக்கிறது, விசுவாசம் இருக்கிறது. ஆராதனையின அடிப்படையான தத்துவத்தைப்பற்றிய அறிவும் அவனிடத்திருக்கிறது. ஆதலால் வேதாந்த நுண்ணறிவுடன் கூட்டிக் கிறிஸ்துவ அமைப்பையும், இஸ்லாமிய ஒற்றுமையையும் அவன் அநுஷ்டானத்தில கொண்டு வருவானாகில் அவை இந்தியாவுக்குச் சிறந்ததோர் அழகையும் ஆற்றலையும் உண்டுபண்ணும். அப்போது இழிந்த அடிமை வாழ்வு அகன்றுபோம்; புதிய பெருவாழ்வு பிறக்கும். பூலோக சுவர்க்கமாக இந்தியா இலகும். நேர்மையைக் காண விரும்புபவர் கவனம் இந்நாட்டின்திசை செல்லும். நேர்மை நாடுபவர் இந்நாட்டை நோக்கி நண்ணுவர். இருமைப் பயன் வேண்டுபவர் இத்தேசத்துக்குத் தீர்த்த யாத்திரை பண்ணுவர். இந்தியாவை இத்தகைய நிலைக்குக் கொணரும் பொறுப்பு யுவர்கள் யுவதிகள் கைவசம் இருக்கிறது. இதை உணர்ந்து அவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன், தளரா ஊக்கத்துடன், தம் கடனாற்ற எழுந்திருப்பார்களாக,

# கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

"இரதி மன்மத"

# சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம வேறுகிடையாது:—

ஓர் முறை பரிக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்றேட்,
கோல்லம், Quilon S. India

H 208, 1-12-35 to 31-5 36

திறம் தேக்கமரம்   பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.

| | |
|---|---|
| சியம் தேக்கமரங்கள் | ரூபா 2-60சதந் தொடக்கம் |
| றங்கூன் தேக்கமரங்கள் | ரூபா 2-75சதந் தொடக்கம் |

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர்பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
(Y 57. 1-5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

இல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

53 1Y.-1—31-12-35)


## எதிரிக்கு விருந்து.

சென்ற 14-ந்திகதி கொக்குவிலில் வசிக்கும் பயில்வர்களம் என் பவரை அவ்வூர் சின்னப்பு செல்லத்துரை என்பவர் ஓர் கொடுவாட்சத்தியால் படுகாயப் படுத்தியதாகச் சென்ற 19-12-35 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதபதி முன்னர் பொலிஸ் சார்ஜன்ற் செல்லையா வழக்குத் தொடர்ந்தார். எதிரியைத் தேடிப் பார்த்தபோது எதிரி அகப்படவில்லை. ஆகையால் எதிரிக்கு விருந்து விடப்பட்டது.


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துட பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்களையும் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியதகைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாலு, சாலா முஸ்லி, சப்பேமுத்விலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக பஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திருப்திகள் இந்தலேகியத்தைச் சாட பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும்பல முப் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.


இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுச்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடு வாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு

Y55 1-1-34 to 31-12-35) இலோன்.

## ஆண்டமார்க் ஓடுகள்.



உலகில் உள்ள ஓடுகளில் மிகப் பெரியனவும் மலிந்தனவும் இவையே.

அரசினர்க்குஇவ்வோடுகளைஉதவுவோர்
J. செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

H 114 1-8-35 to 31-1-36)


வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்
அதற்குகந்தது
இந்துசாதனமே.


## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திருபா 5ம்ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இக்கிதிகைய ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தமாயும், சம் பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

சைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில பொருளும் சகதாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.

# சண்முகநாதன்

## புத்தகசாலை வெளியீடு.

1. செந்தமிழ் வாசக சிந்தாமணி.
ஆங்கில J. S. C. வகுப்பு, லண்டன் மற்றிக் வகுப்புகளில் உபயோகிக்கப்படுவது. விலை சதம் 75.
2. வில்லி பாரதம் - காண்டவதகனச் சருக்கம்
வித்துவ சிரோன்மணி ஸ்ரீமத் ச. சு. பொன்னம்பலபிள்ளை, புலோலி ஸ்ரீமத் வ. குமாரசுவாமிப் புலவர் செய்த திருத்தஉரையோடும், நூலாசிரியர் வரலாற்றோடும் வெளிப்பட்டிருப்பது. 1936-ம் ஆண்டுப் பிரவேச பண்டித பரீட்சைப்பாடமாயுள்ளது. விலை சதம் 50.
3. நாலடியார் முதற் பத்ததிகாரங்கள்.
பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, நூல்வரலாறு முதலியவைகளுடன் 1936-ம் ஆண்டு கேம்பிரிஜ் ஸீனியர் பரீட்சைக்குப் பாடமாயுள்ளது. விலை சதம் 60.
4. அரிச்சந்திரபுராணம்
மயானகாண்டம் உரையுடன் 1936-ம் ஆண்டு கேம்பிரிஸ் யூனியர் பரீட்சைக்குப் பாடமாகவுள்ளது. விலை சதம் 50.
இதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பு (அச்சிலிருக்கிறது.)

இன்னும் தேவையான ஆங்கில தமிழ் சமஸ்கிருத புத்தகங்களும் வித்தியாசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய எல்லா உபகரணங்களும் எங்களிடம் தொகையாகவும் சில்லறையாகவும் பெறற்பாலன.

வண்ணார்பண்ணை, 30-9-35. } ஸ்ரீ. சண்முகநாதன் புத்தகசாலை.

(Q. 161. 3-10 to 31-12-35.) வி.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8 ம் இலக்கச் சட்டத்திச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

1934-ம் ஆண்டு டிசம்பர் மாசம்

| நம். | ௳. | ரூ. | ச. | பெயர். | ஊர் | நகைகளின் விபரம், |
|---|---|---|---|---|---|---|
| J7738 | 1 | 130 | | S. M. மீருசாய்பு | சோனகதெரு | பொன் சடையம் 2 பொன் இறகாப்பு 2 |
| 7756 | 1 | 8 | | யா. மீருசுமெய்தீன் | சோனகதெரு | காதப்பு 2, கொப்பு 2 |
| 7767 | 2 | 18 | | அ. சபாபதிப்பிள்ளை | புங்குடுதீவு | கலகோடு 2, பதக்கம் 1 |
| 7829 | 5 | 280 | | வா. ச. முகம்மதுமெய்லை | சோனகதெரு | புருக்கூட்டு சவடி 1 |
| 7865 | 7 | 8 | | க. அம்மா | காவாகதுறை | கல்லுதகோடு2 |
| 7877 | 8 | 11 | | மு. சாகுல்ஹமீது | சோனகதெரு | பூசாந்திரம் 1 |
| 7880 | 8 | 25 | | ப. தம்பிராசா | காவாக்துறை | அமரிக்கன் ½ டலர் 1 |
| 7886 | 8 | 40 | | வி. மாணிக்கம் | காவாகதுறை | பிலகோசுஇல்லாத பொன்கொடி 1 |
| 7887 | 8 | 18 | | C. T. சுடராசா | கச்சர்மடம் | கவுதகோர் 1 |
| 7911 | 10 | 10 | | கா. முருகேச | வேலணை | குப்பிக்கடுக்கன் 4 |
| 7940 | 12 | 40 | | உ. சேகுமுகம்மது | சோனகதெரு | பொன் சவடி 1 |
| 7967 | 12 | 15 | | ம. அந்தோனி | காவாகதுறை | குப்பிக்கடுக்கன் 2 காசப்டம் 2 |
| 7996 | 14 | 12 | 08 | செ. செயிலுமுகம்மது | சோனகதெரு | மணிக்கோர்வை 1 அரக்குதத 2 தனிமணி 5 |
| 8003 | 15 | 15 | | மு. சேதுமதார் | சோனகதெரு | மோதிரம் 1 |
| 8024 | 15 | 75 | | செ. முகம்மதுஹமீது | சோனகதெரு | ஊதுபட்டு மணிக்கோர்வை 1 |

விற்பனவு யுவவருஷம் மார்கழிமீ 23ம் திகதிக்குச் சரியான (7-1-36) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிதொடக்கம் எடுபட்டகவை பிறகேலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கி ஐயம்பிள்ளை உடையார்,
வொந்தீஸ்மேக்தர்.

(Mis. 228. 23 & 26 12 35.)

அறைபறை யன்னர் கயவர் தாங்கேட்ட
மறை பிறர்க் குய்த்துரைக்கலான்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday, 26th December 1935